
மங்கை
வெளியீடு

# முதல் பொது நூலக இயக்கம்

அ. திருமலைமுத்துசுவாமி



# முதல் பொது நூலக இயக்கம்

அ. திருமலை முத்துசுவாமி
*M.A., B.T., Dip. Lib. Sc.*

மீனாட்சி புத்தக நிலையம்
மதுரை.
1962

அருணாசலம், திருமலை முத்துசுவாமி (1928)
மங்கை வெளியீடு—5
முதல் பதிப்பு: 1962

விலை ரூ. 1—25

முத்தையா அச்சகம், 202, ஜானி ஜான் கான் தெரு, சென்னை-14.

# முன்னுரை

'முதல் பொதுநூலக இயக்கம்' என்னும் இச்சிறு நூல் இங்கிலாந்தின் பொது நூலக வளர்ச்சியைப் பற்றிச் சுருக்கமாகக் கூறுகின்றது. இந்நூல் எழுதுவதற்கு, நூல்கள், துண்டுப் பிரசுரங்கள் முதலியன கொடுத்து உதவிய 'பிரிட்டிஷ் கவுன்சில்' நூலகத்தாருக்கு என் நன்றி என்றும் உரியது.

நூலகத் துறையில் ஈடுபாடுடைய அனைவரும் இச்சிறு நூலுக்கு ஆதரவு நல்கி என்னை மேலும் ஊக்குவிக்க வேண்டுகின்றேன்.

சென்னை
3—2—1962

அ. திருமலை முத்துசுவாமி

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தோற்றுவாய் | ... | 1 |
| 2. | பொது நூலகத்தின் வளர்ச்சி | ... | 9 |
| 3. | நகர நூலகம் | ... | 30 |
| 4. | சிற்றூர் நூலகம் | ... | 47 |
| 5. | இலண்டன் பொருட்காட்சி நூலகம் | ... | 52 |

எனது பேராசியரும், சென்னைப் பல்கலைக் கழக நூலகத் தலைவரா யிருந்து ஓய்வு பெற்றவருமாகிய உயர்திரு. **ஆர். ஜனார்த்தனம் நாயுடு** அவர்களுக்கு.

# முதல் பொது நூலக இயக்கம்

## 1. தோற்றுவாய்

"நூலகம் இல்லாத ஊரின் அழகும் பாழ், அறிவும் பாழ் என்ற நிலை இன்று ஏற்பட்டு விட்டது. அச்சுப் பொறியின் வளர்ச்சியால் நூல்களின் தொகையும் பெருகியது; பயனும் பெருகியது; ஆகவே நூலகம் ஆங்காங்கே ஏற்பட்டு வளர்தல் ஓர் இயக்கமாகவே செழித்து விட்டது. பொது மக்களின் நல் வாழ்க்கைக்கு உரிய சமூகத் தொண்டுகளில் நூலகமும் சிறப்பிடம் பெற்றுள்ளது" என்ற தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் பொன்மொழிகளுக்கேற்ப, இன்று எல்லா நாடுகளிலும் பொது நூலக இயக்கம் வேரூன்றித் தழைக்கத் தொடங்கியுள்ளது என்னலாம். முதன் முதலில், பொது நூலக உணர்வின் காரணமாய் அதனைப் பெரு இயக்கமாக நடத்தி வெற்றி கண்ட பெருமக்கள் ஆங்கிலேயரே ஆவர்.

"நூலகத்தில் உனக்குக் கிடைப்பன எவை என்பதை எண்ணிப்பார். பல்லாயிரம் ஆண்டுகளாக

விளங்கும் இப் பாரில் வாழ்ந்தவருள் தலைசிறந்த அறிஞர், கவிஞர் தம் கல்வியின் பயனாக விழுமிய கருத்துக்களைச் சிறந்த முறையிலும் சீரிய ஒழுங்கிலும் தொகுத்த தொகுப்புக்களின் தொகுதி உன்னுடன் உறவாடக் காத்திருக்கின்றன. தம் உயிர்த் தோழர்களுக்குக் கூட அவர்கள் முற்றிலும் மனந் திறந்து சொல்லியிருக்க முடியாத உயரிய கருத்துக்கள் தெள்ளத்தெளிய வரையப் பட்டு ஏதோ ஒரு ஊழியில் வரும் என்னிடம் தரப் பட்டுள்ளன" —இதனைக் கூறியவர் அறிஞர் எமர்சன் ஆவார். அவரது மொழிகள் நூலகத்தினது சீர்மை யினையும் சிறப்பினையும் செம்மையுற எடுத்துக் காட்டு கின்றன. எனவேதான் ஆங்கிலப் பெருமக்கள் 'நூலகங்கள் மக்களுக்காக மக்களாலேயே நடத்தப் பெற வேண்டும்' என்ற அடிப்படைக் கொள்கையுடன் பொது நூலக வளர்ச்சிக்காக அரும் பாடுபட்டு அயராது உழைத்து, இவ்வவனி போற்றும் வண்ணம்பொது நூலகச் சட்டத்தினை இயற்றி அத்துறையில் உலக நாடுகளுக் கெல்லாம் வழிகாட்டிகளாக விளங்குகின்றனர்.

## முதல் பொது நூலகம்

எழில் மிகுந்து விளங்கும் இங்கிலாந்து நாட்டில் ஏறத்தாழ கி. பி. 18-ஆம் நூற்றூண்டிற்கு முன்னரே பொது நூலகங்கள் நிறுவப்பட்டு விட்டன என்று கூற லாம். எடுத்துக் காட்டாக கி. பி 1421ல், 'கில்டுகால் என்னும் இடத்தில் சர். ரிச்சர்டுவைட்டிங்டன் (Sir Richard Whittington) என்னும் பெரியாரால் தொடங்கப் பெற்ற பொது நூலகத்தினைக் கூறலாம். மக்கள் பயன் பெறட்டும் என்ற பெரு நோக்கோடு தம்மிடமிருந்த கிடைத்தற்கரிய பல நூல்களைச் சான் கார்ப்பெண்டர் என்பவர் இந்

நூலகத்திற்குக் கொடுத்துதவினர். ஆனால் இந்நூலகம் 16-வது நூற்றாண்டின் மத்தியில் சாமர்செட் கோமகனான எட்வர்ட் என்பவரால் வாங்கப்படவே, இதனைப் பொது மக்கள் பயன் படுத்த முடியாது போயிற்று. நார்விச், பிரிச்டல், இப்சுவிச், லெச்டர் என்ற நான்கு இடங்களிலும் நகர நூலகங்களும் (Town Libraries), பக்கிங்காம்சயர் என்னுமிடத்தில் ஒரு கிராமிய இலவச நூலகமும் பதினேழாவது நூற்றாண்டில் திறக்கப்பட்டன. ஆனால் மக்களிடையே ஆர்வம் இல்லாது போயினமையால், இந்நூலகங்கள் விரைவில் வளர்ச்சியுறாது போயின.

## சுழல் நூலகங்கள் (Circulating Libraries)

போர்க்காலங்களிலே நூல்கள் வாங்கும் வழக்கம் மிகவும் அதிகமான காரணத்தினால், பெங்குனி போன்ற பதிப்பகத்தார் பலர் கையடக்க மலிவு நூல்களைப் பல்லாயிரக் கணக்கிலே வெளியிட்டதன் காரணமாக ஆங்கிலேயர்கள் பிற நாட்டு மக்களைவிட அதிகமாக நூல்களைப் பெற்றுப் படிக்கத் தலைப்பட்டனர். நெடுங் கதைகள், வாழ்க்கை வரலாறுகள், பயண நூல்கள் முதலிய பொழுது போக்கு நூல்களை ஆங்கிலேயர்கள் பெரிதும் விரும்பிப் படிக்கின்றனர். பொது நூலகங்களை மட்டுமன்றி, சுழல் நூலகங்களையும் (Circulating Libraries) பயன்படுத்துகின்ற ஆங்கிலேயர்கள் ஒருவர், இருவர் அல்லர்; மிகப் பலராவர். தெளிவாகக் கூறின், குறிப்பு நூலகங்களைத் (Reference Libraries) தவிர, ஏனைய நூலகமெலாம் சுழல் நூலகங்களே. சுழல் நூலகம் என்ற பெயரையுடைய ஒருவகை நூலகத்தின் வேலை முறை பின்வருமாறு:—

ஒருவர் ஒரு நூலகம் வைப்பார். அவர் நூறு நூல்களை வாங்கி வைத்துக் கொள்வார். அவரிடம் ஒவ்வொருவரும் மாதச் சந்தாதாராகச் சேர்ந்துகொண்டு, மாதத்திற்கு ஒரு குறிப்பிட்ட தொகையைச் சந்தாவாகத் தந்துவருவர். இவ்வாறு சந்தா தருவோரே அந்த நூலகத்திலிருந்து நூல்களை வாங்கிப் படிப்பர். இத்தகைய முறையிலே நூலகம் நடத்துவது புதுமையாகத் தோன்றியதன்று; பதினேழாம் நூற்றாண்டிலேயே சில நூல் விற்பனையாளர்கள் இந்த முறையைக் கையாண்டு நூல்களைக் கொடுத்து வந்தனர்.

1725 ல் பெஞ்சமின் பிராங்கிளின் என்பவர், தம் வீட்டுக்கருகிலேயிருந்த ஒரு நூல்விற்பனையாளரிடம் மேற்கூறிய முறையிலே நூல்களை வாங்கிப் படித்தார். அதே ஆண்டில் ஆலன் ராம்சே என்பவர், மேலே கூறிய வணிக நூலகம் ஒன்று ஏற்படுத்தினர். அந்த நூலகம் எடின்பரோவில் ஏற்படுத்தப்பட்டது. இதுவே முதன்முதல் ஏற்படுத்தப்பட்ட சுழல் நூலகமாகும். இது தோன்றிய பதினைந்தாண்டுகட்குப் பின்னர் இலண்டன் மாநகரிலே 'காத்தார்ன் கட்சு பிரிட்டிசு நூலகம்' (Cawthorn and Hutts' British Library) ஒன்று தோன்றியது. இந் நூலகம் 1913 ஆம் ஆண்டுவரை நற்பணி பல செய்து, பின்னர் பதினெட்டாம் நூற்றாண்டிலே புகழொடு விளங்கிய தேயி நூலகத்தோடு (Days Library) இணைக்கப்பட்டு விட்டது. இன்று இங்கிலாந்திலே எண்ணிக்கையற்ற சுழல் நூலகங்கள் உள்ளன. அவற்றிலிருந்து நூல்கள் பெரிய நகரங்களுக்கு மட்டுமன்றிச் சிற்றூர்களுக்கும் செல்லுகின்றன. இச் சுழல் நூலகங்களின் கிளைகள் நாடு முழுவதும் இயங்கிவருகின்றன.

எப்பொழுது பார்த்தாலும் இவற்றின் நூல்கள் பத்து இலட்சத்துக்குக் குறையாமல் மக்களிடையே உலவும் என்று கூறல் மிகையன்று.

மூதீ நூலகம் (Mudie's Library) என்ற நூலகம் செல்வாக்கோடு விளங்கிய காலத்தில், அதன் விருப்பப்படியே நூல்கள் வெளியிடப்பட்டன. அந்த நூலகத்தைப் போன்றே இன்றைய சுழல் நூலகங்கள் நூல் உலகிலே அதிக செல்வாக்குடன் விளங்குகின்றன. இந்தச் சுழல் நூலகங்கள் பிறமொழி நூல்களையும், சில பழைய நூல்களையும் வெளியிட்ட போதிலும், நெடுங்கதை, பயண நூல், வாழ்க்கை வரலாறு, நாடகம் ஆகிய நூல் வகைகளையே சிறப்பாக வெளியிட்டு வருகின்றன. தம்முடைய வாடிக்கைக்காரர்களின் தேவைகளை நிறைவேற்ற அண்மையில் வெளியாகும் நூல்கள் யாவற்றையும் இந்தச் சுழல் நூலகங்கள் ஆயிரக்கணக்கிலே வாங்கி அடுக்கிவிடுகின்றன. இதனால், நூல் விற்பனை நிலையங்கள் நெடுங்கதை, சிறுகதை முதலிய நூல்களை வெளியிட்டவுடனே அவற்றிலே பெரும்பான்மையான படிகளை இச் சுழல் நூலகங்களுக்கே விற்றுவிடுகின்றன. இதன்காரணமாகத் தனிப்பட்ட முறையிலே நூல் வாங்குவோருக்கு நூல் கிடைப்பதில்லை. ஏனைய ஐரோப்பிய நாட்டு நூல்கள் எல்லாம் வெறும் காகித மேலட்டையே கொண்டிருக்கும்பொழுது, பிரிட்டன் வெளியிடும் நூல்கள் மட்டும் கண்ணைக்கவரும் 'கலிகோத்' துணியட்டை கொண்டு காட்சியளிப்பதற்குக் காரணமாக அமைந்திருப்பன இச் சுழல் நூலகங்களே.

முதல் உலகப் பெரும் போர் முடிந்தபின்னர், பல விதமான புதிய முறையில் அமைந்த சுழல் நூலகங்

கள் தோன்றலாயின. இவற்றை ''நாலு காசு நூலகம்'' என்னலாம். அஃதாவது, இந்த நூலகங்கள், நாலு காசு கொடுப்போர் அனைவருக்கும் நூல் வழங்கிவந்தன என்பதாம். கல்வி ஓரளவுக்குக் குறைவாகவே யுடைய மக்களுக்கே இந்தப் புதிய சுழல் நூலகங்கள் நூல் வழங்கி வந்த போதிலும், இவை மிகுந்த செல்வாக்கை அடைந்து விட்டன. இத்தகைய நூலகங்கள், சிற்றூர், பேரூர், கடைகள், யாங்கணும் பரவிவிட்டன. இந்தச் சுழல் நூலகங்களால் விற்கப்படுகின்ற நூல்களுள் காதற்கதைகள், துப்பறியும் நெடுங்கதைகள் முதலிய பொழுது போக்கு நூல்களே பெரும்பான்மையாகும். வெறும் காதற்கதைகளையும், நெடுங்கதைகளையும் தானே இச் சுழல்நூலகங்கள் விற்கின்றன என்று எண்ணி அவற்றைப் புறக்கணித்து விடலாகாது. ஏன் என்றால், இச்சுழல் நூலகம் இல்லையென்றால், எவரும் நூல்கள் பக்கம் கண்ணெடுத்தும் பாரார். அத்தகையோரைப் படிக்கவைக்கும் பெருமை இந் நூலகத்தைச் சாருமல்லவா ?

## நூலகத்தின் பணிகள்

நூலகம் செய்யவேண்டிய பணிகள் மிகப் பலவாக இருந்த போதிலும், சுழல் நூலகங்களால் மிகச் சிறு பான்மையான மக்களையே படிக்கவைக்க முடிந்தது. அதற்குரிய காரணங்கள், பெரும்பான்மையோர் உரிய சந்தாத் தொகையைக் கொடுக்கமுடியவில்லை என்பதும், இந்தச் சுழல் நூலகங்களின் பணிகளும் ஒரு வரையறைக்கு உட்பட்டவையே யென்பதுமாம். புதினம், பயண நூல்கள், வாழ்க்கை வரலாறுகள் என்பன தவிர, வேறு கற்றறிந்த

பேரறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள், தொழில் வல்லுநர் ஆகியோர்களுக்கு வேண்டிய நூல்களை இந்த நூலகங்கள் வழங்கவில்லை. ஏனென்றால், ஆராய்ச்சியாளர்க்கும், பல் துறை அறிஞர்க்கும் நூல்வழங்குதல் தங்களின் எல்லைக்கு அப்பாற்பட்டது என்று இந்த நூலகங்கள் நினைக்கின்றன. கிடைத்தற்கரிய பழைய நூல்களை இந்நூலகங்கள் காத்தோம்பலும் இல்லை. மேற்கூறிய பலதுறை அறிஞர்க்கும் நூல் வழங்க வேண்டுமாயின், பல்துறைகளையும் சேர்த்தல், காத்தல், வகுத்தல், வழங்குதல் ஆகிய பணிகளைச் செய்வதற்கு ஓர் அரிய திட்டம் தீட்டப்படல் வேண்டும். இத்தகைய திட்டத்தைப் பொது நூலகங்களே மேற்கொள்ள முடியும்.

நூல்கள் பல திறப்படும். பல திறப்பட்ட பல்லாயிரக்கணக்கான நூல்களையும் தேடிச் சேர்த்து, நூலகங்கள் பலதிறப் படிப்பாளர்க்கும் வழங்கல் வேண்டும். பல திறப்பட்ட நூல்களையும், அவ்வவற்றிற்குரிய தனித்தனியான இடங்களிலே ஒழுங்காகக் கவர்ச்சியான முறையிலே படிப்பாளர்கள் எவ்விதத் தடையும் தயக்கமும் இன்றி எளிதில் எடுத்துப் படிக்கத்தக்க முறையிலே நூலகங்களிலே அடுக்கி வைக்கப்படல் வேண்டும். இவ்வாறு நூலகத்தை அமைப்பதே கல்விக்குச் செய்யும் ஒரு பெரும் பணியாகும். ஏனென்றால், பல திறப்பொருள் பற்றிய விளக்கங்களை வழங்குவதோடு, நூல்களை எடுத்துப் படிப்பதற்கும் இந்த நூலகம் தூண்டுகோலாக அமைந்துள்ளது.

புத்தம் புதிய நூல்களை மட்டும் வாங்கி வைத்தல் போதாது. இன்றைக்குத் தேவையற்ற பழைய நூல்களை

யும், இன்று வெளியாகியும் படிப்பாரற்ற நூல்களையும் வாங்கிக் காத்தோம்பி, வருங்கால மக்கட்கும் வழங்குதல் மிகவும் இன்றியமையாததாகும். இவ்வாறு, சில நூலகங்கள் நூல்களைக் காத்தோம்பலே பணியாகக்கொண்டு விளங்குகின்றன.

# 2. பொது நூலக வளர்ச்சி

இந்த நிலைமையே பதினெட்டாம் நூற்றாண்டுவரை நீடித்திருந்தது. பெரும்பான்மையான மக்கள் கல்வியறிவற்றவர்களாக இருந்தபோதிலும், நூலகம் நான்கு வகையான முறைகளிலே வளரத் தொடங்கிவிட்டது என்னலாம். கல்வி நூலகங்களின் செல்வாக்கும் பணியும் வரவர அதிகரித்துக்கொண்டே செல்லும்பொழுது, ஒருபால், அறிவியல் நூலகம், வரலாற்று நூலகம் போன்ற தனித்துறை நூலகங்களும், மற்றொருபால், கதை, கட்டுரை, நாடகம் முதலிய எல்லா வகையான நூல்களும் கொண்ட பொது நூலகங்களும் தோன்றலாயின. இந்த மூவகையான நூலகங்களுடன் நான்காவதாகச் சேர்க்கப்படவேண்டிய நூலகம், நாட்டு நூலகமாகும். அறிஞர்கள், பொது மக்கள் ஆகிய இருதிற மக்களுக்கும் ஏற்ற நூல்களை வழங்குவதோடு, என்றும் பயன்படும் நூல்களைக் காத்தோம்பலும் இந்த நாட்டு நூலகத்தின் (National Library) பணியாகும்.

இந்த நான்கு வகையான நூலகங்களின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் உதவி புரிந்த, மூலங்களையும், அவற்றைக் கொண்ட பல்வேறு வகையான நூலகங்களையும் பிரித்து வகைப்படுத்தி ஆராய்தல் பெரிதும் கடினமாகும். அரசாங்க நூலகம், கல்லூரி நூலகம், பள்ளி நூலகம், பொழுதுபோக்கு மன்ற நூலகம், பல்கலைக் கழக நூலகம், ஆராய்ச்சி நூலகம், மருத்துவ நூலகம், விடுதி

நூலகம், சமய நூலகம்,பொருட்காட்சி நூலகம், தொழில் நூலகம், அறிவியல் நூலகம் முதலிய எத்தனையோ நூலகங்கள் நாட்டிலே உள்ளன. இவை தவிர, பொது நூலகம், சந்தா நூலகம் போன்றனவும் உள. லண்டன் மாநகரில் மட்டும் சிறந்த நூலகங்கள் எழுநூறு உள்ளன. இவற்றையெல்லாம் வகைப்படுத்தி ஆராய்தல் என்பது எளிதன்று.

முதன் முதலில், எல்லா மக்களும் விரும்பும் பொது நூலகங்களையும் அவற்றின் முன்னோடிகளையும் ஆராய்தல் மிகவும் எளிதாகும். எனினும் அவற்றை ஆராய்வதிலும் நாம் சில இடையூறுகளை ஏற்கவேண்டித்தான் உள்ளது. ஏன் என்றால், பொது நூலகத்தைப் பயன்படுத்துகின்ற பொதுமக்கள் என்று குறிப்பிட்ட ஓர் இனம் இல்லை. பொதுமக்களிலே, கதை, கட்டுரை, முதலிய எல்லா நூல்களையும் படிப்போருக்குள்ளேயே கட்டுரையை மட்டும் பெருவிருப்புடன் தனித்து வைத்துப் படிப்போரும் உண்டு. ஒரு துறையிலேயே பெருவிருப்புடன் படிக்கும் அறிஞர்களிலே, கதை, நெடுங்கதை, புதினம் போன்ற பிற நூல்களையும் பொதுவாகப் படிப்போரும் உண்டு. பொது நூலகம் என்பது குறிக்கோளற்ற மக்கள் படிக்கும் நூல்களைக் கொண்ட ஒரு நூலகம் என்று எண்ணுவது தவறாகும். கல்லூரிகளிலே ஒவ்வொரு துறைக்கும் தனித்தனியே இருக்கும் நூலகங்களைத் தனி நூலகங்கள் என்னலாம். கல்லூரியிலே பொதுவாக எல்லா மாணவர்க்கும் உரியதாக இருப்பது பொது நூலகம் என்று சொல்லப்படும், இத்தகைய பிரிவினை தெளிவற்றதாகத் தோன்றுதல் இயல்பு. தனி நூலகத்துக்கும் பொது நூலகத்துக்கும் இடையே உள்ள ஒற்றுமையும் ஒத்துழைப்பும் அதிக

[illegible] இந்தப் பிரிவினை மேலும் தன் ஆற்றலை இழக்கிறது; தெளிவு குறைந்த ஒன்றாகத் தோன்றுகிறது. இன்னார்தாம் இந்த நூலைப் படிக்கலாம், இன்ன நூலை இன்னவர்தாமே படிக்கலாம் என்ற பொருளற்ற வரையறைகளையும், கட்டுப்பாடுகளையும் உடைத்தெறிந்து, ஆண், பெண், மேலோர், கீழோர் ஆகிய பலரும் பல நூல்களைப் படிக்கவும், படித்துப் பயனும் அறிவும் பெறவும் வாய்ப்பும் ஆக்கமும் அளித்துவருவன இப்பொழுது நூலகங்களே.

எல்லோரும் பயன்படுத்துகின்ற பொது நூலகம் புதிதாகத் தோன்றிய ஒன்று அல்ல. முன்னர்க் கூறிய படி பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே, கவன்றி (Coventry). நார்விச்சு, (Norwich), லெஸ்டர் (Leicester), இப்ச்விச் (Ipswich) போன்ற நகர்களிலே, தனிப்பட்டவர்களின் நிதியுதவியினால், நகர் மன்ற நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டன. அதே நூற்றாண்டிலும், அதற்குப் பின்னும், குருமாருக்கும் பிறருக்கும் பயன்படும் நூலகங்களை ஏற்படுத்தப் பல முயற்சிகள் செய்யப்பட்டன. இந்த முயற்சிகளின் பயனாக 1653-ல் தோன்றி இன்றும் நிலைத்து நிற்கின்ற நூலகந்தான் மாஞ்செஸ்டரில் (Manchester) உள்ள சேத்தம் நூலக (Chetham Library) மாகும். இந்நூலகத்தோடு தோன்றிய பிற சிறு நூலகங்கள் எல்லாம், பொருள் பற்றாக் குறை, ஊக்கமின்மை, நல்லதோர் ஆட்சியின்மை ஆகிய குறைகளால் கால வெள்ளத்திலே மூழ்கி மறைந்து விட்டன. பொது நூலகத்தின் மெய்யான முன்னோடிகள், தனிப்பட்ட சந்தா நூலகங்கள், பொறியியலர் நிலைய நூலகங்கள் (Mechanics Institute Library) ஆகியவை

தாம். பதினெட்டாம் நூற்றூண்டிலும், பத்தொன்பதாம் நூற்றூண்டின் தொடக்கத்திலும் சிறுபான்மையான மக்களே படித்து வந்தனர். 1870-ல்கூட நூற்றுக்கு இருபத்தைந்து பேர் படியாத பாமர மக்களாகவே வாழ்ந்து வந்தனர். கல்வி, நடுத்தர வகுப்பு மக்களிடையே பரவிய பொழுது, வாழ்க்கைச் செலவு உயர்ந்து, நூல்களின் விலை அதிகமாகி வாங்குவதற்கும் அரிதாக இருந்தபோதிலும், நூல்களை வாங்கிப்படிக்கும் வழக்கம் அதிகரித்தது. நண்பரும், உற்றூர் உறவினரும் சேர்ந்து சேர்ந்து பணம் போட்டுப் பல நூல்களை வாங்கித் தம்முள் மாற்றி மாற்றிப் படித்துக்கொண்டார்கள். இவர்கள் தம்முடைய வீடுகளிலே ஏதேனும் சடங்கு, திருமணம் போன்ற நிகழ்ச்சிகளிலே கூடியிருக்கும்பொழுது, தாம் படித்த நூல்களைப் பற்றிப் பேசுதலும், நூற்பொருள் பற்றி ஆராய்தலும், இனிமேல் ஒவ்வொருவரும் என்ன என்ன நூலை வாங்குதல் வேண்டும் என்று முடிவு செய்தலும் வழக்கங்களாகும். பழைய சந்தா நூலகங்களும் இம்முறையிலே இயங்கி வந்தன. ஆனால் அவை இவற்றைப் விடப் பெரியவை. லிவர்பூல் நூலகம், லீட்ச் (Leeds) நூலகம், பிராபோர்டு நூலகம், இலக்கிய மன்றம், நியூகாசில் இலக்கிய மெய்யறிவு மன்றங்கள் முதலிய பல நூலகங்களும் மன்றங்களும் பதினெட்டாம் நூற்றூண்டின் பிற்பகுதியிலே தோன்றி, மக்கள் உள்ளத்திலே படிக்கும் வேட்கையை எழுப்பிப் பண்பாட்டுப் பெருமன்றங்களாகத் திகழ்ந்தன. மேற்குறித்த மன்றங்களும் நூலகங்களும், தம்மோடொத்த சிறந்த நூலகங்கள் இருப்பினும், இன்றும் நின்று பணியாற்றி வருகின்றன. பிற நூலகங்களிற் சில காலப்போக்கில் வேறு சில நூலகங்களோடு ஒன்றின; சில அழிந்தன.

சங்கா நூலகங்களிலே சிறந்த நூலகம் லண்டன் நூலகமாகும். இந்த நூலகம் 1841-ல் கார்லைல், கிளாட்ச்டன் போன்ற அறிஞர்கள் பலர் கூடித் தோற்று விக்கப்பட்டதாகும். டிக்கன்சு, தேக்ரே, டெனிசன், மெக் காலே முதலிய பேரறிஞர்கள் இந்த நூலகத்தை நன்கு பயன்படுத்தியிருக்கின்றனர். இன்றும் பல்லாயிரக்கணக் கான மக்கள் இந்த நூலகத்தைப் பயன்படுத்தி வருகின்ற னர். இன்று இந் நூலகத்திலே காட்சி நல்கும் நூல் களின் எண்ணிக்கை ஐந்நூறுயிரம். உலகத்திலே உள்ள சங்கா நூலகங்களிலே இங்குத்தான் இவ்வளவு நூல்கள் உள்ளன.

அதீனியம் நூலகம், மறுமலர்ச்சி நூலகம், ஆக்ச்போர்டு நூலகம், கேம்பிரிச் நூலகம், ராயல் கழக நூலகங்கள் முதலிய நூலகங்கள் பதினெட்டாம் நூற்றுண்டின் தொடக்கத்திலே ஏற்பட்டவையாம்.

இந்த நூலகங்களால், தொழிலாளிகள், பேரறிஞர் கள், கலைஞர்கள் ஆகிய தொழிலார்வம் மிக்க பெரு மக்களுக்கு ஏற்ற நூல்களை வழங்க முடியவில்லை. ஆனல், தங்களுடைய தொழில் தொடர்பான நூல்களை மேலும் மேலும் படிக்க வேண்டும்; புதுத் தொழில்களைச் செய்ய வேண்டும்; தொழிலில் முன்னேறவேண்டும் என்ற அவா மட்டும் தொழிலாளர் முதலிய தொழில் நிபுணர்களின் உள்ளத்திலே கொழுந்துவிட்டு எரியலாயிற்று. இதனை அறிந்தார் சார்ச் பிர்க்பெக் (George Birkbek) என்ற ஓர் பேராசிரியர். இவர் கிளாச்கோவில் உள்ள ஆண்டர் சோனியன் கல்வி நிலையத்திலே இயற்கைப் பாடப் பேரா சிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். இவர்

1800-ல் தொழில் துறை மக்களுக்காக ஓர் வகுப்பு நடத்தத் தொடங்கினர். வகுப்பு மாணவர் பயன்படுத்தும் பொருட்டு விரைவில் ஒரு நூலகமும் ஏற்படுத்தப்பட்டது. ஆண்டுகள் சில சென்றன. தொழில் வகுப்பு மாணவர்கள் எல்லோரும் சேர்ந்து கிளாச்கோ பொறியர் கல்வி நிலையம் ஒன்றை ஏற்படுத்தினர். இதனைப் பின்பற்றிப் பல நிலையங்கள் பின்னர் அடுத்தடுத்து நாடெங்கணும் தோற்றுவிக்கப்பட்டன. இதுபோன்ற நிலையங்கள் 1849-ல் நானூறும், 1863-ல் எழுநூறும் ஏற்பட்டன. இத்தனை நிலையங்களும் மாணவர்களாலேயே நடத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

சான்மின்டோ என்பார் தம்முடைய "பொது நூலக வளர்ச்சி வரலாறு" என்ற நூலிலே மேற்கூறிய பொறியர் கல்வி நிலையங்களைப் பற்றிக் கீழ்வருமாறு கூறுகின்றார் :—"இந்த நிலையங்கள் பொதுமக்கள் படிப்பதற்கு வாய்ப்பளிப்பதன்மூலம் செய்த பணி அளவிடற்கரியது. செலவில்லாக் கல்வி கட்டாயத்துக்கு வருமுன்னர்ப் படித்த பெருமக்கள் எல்லோரும் கல்வியும், பொது அறிவும், வாழ்விலே முன்னேற்றமும் தமக்குக் கிட்டியமைக்கு இந்தப் பள்ளிகளுக்குப் பெரிதும் கடமைப்பட்டவர்களாவர்" இக் கூற்றை எவரும் மறுத்துரையார்; மறுக்கவும் முடியாது.

மேலும் பொது மக்களின் நல்வாழ்வுக்கு ஒரு நல்ல நூலகம் எத்தகைய பணியைச் செய்ய முடியும் என்பதைச் செயற்படுத்திக் காட்டியதின் மூலம், நல்ல நூலகத்தின் தேவையையும் பொது மக்களுக்கு இந் நூலகங்கள் அறிவுறுத்தின.

ஒரு நாட்டின் நல்வாழ்வுக்கு அரும் பெருந் தொண்டுகள் ஆற்றியுள்ள ஒரு மன்றத்தினைத் தோற்றுவித்த பெருமக்களை நாம் மறத்தல் கூடாது. எனவே இங்கிலாந்திலே பொது நூலகம் பல்லாயிரக்கணக்கிலே நாடெங்கணும் தோன்றுமாறு மக்களை ஊக்குவித்த பெருமக்களிலே குறிப்பிடத்தக்க மூவரை நாம் இந்த இடத்திலே எண்ணிப் பார்த்தல் இன்றியமையாத ஒன்றாகும். அம் முப்பெரு நன்மக்களின் திருப் பெயர்கள் வருமாறு :—

1. வில்லியம் ஈவர்ட் (William Ewart), ஸ்காட்லாந்துப் பாராளு மன்ற உறுப்பினர்.

2. எட்வர்டு எட்வர்ச் (Edward Edwards), பிரிட்டிஷ் பொருட்காட்சி உதவி அதிகாரி.

3. ஜோசப் பிரதர்டன் (Joseph Brotherton), லங்காஷயரின் பாராளு மன்ற உறுப்பினர்.

இங்கிலாந்து நாட்டுப் பாராளு மன்றம் எல்லோரும் செலவில்லாமல் பயன்படுத்தக்கூடிய பொது நூலகங்கள் பலவற்றை ஏற்படுத்துதற்குரிய வழி வகைகளை ஆராய்ந்து அறிக்கை ஒன்று தயாரித்தலுக்கு ஓர் ஆராய்ச்சிக் குழு ஏற்படுத்த வேண்டும் என்று பாராளு மன்றத்தை 1849-ல் தூண்டியவர் ஈவர்ட் என்பவராவர்.

இத்தறுவாயில் எட்வர்ட்ச் என்ற நூலக வரலாற்றறிஞர், பொது நூலகங்கள்பற்றிய தகவல்களையும் நடைமுறைகளையும் ஆராய்ந்து அறிந்து தொகுத்துவிட்டார். எனவே, ஈவர்ட் என்பவர், பிரதர்டன் என்ற பாராளு மன்ற உறுப்பினர் ஆதரவுடன் 1850-ல் பொது நூலகச் சட்டம் ஒன்றைப் பாராளு மன்றத்தில் கொண்டு வந்தார். இதனைக் கண்ட பாராளுமன்றத்தில் ஒரு தன்னலக் கூட்டம்

ஒரு நாட்டின் நல்வாழ்வுக்கு அரும்பெருந் தொண்டுகள் ஆற்றியுள்ள ஒரு மன்றத்தினைத் தோற்றுவித்த பெருமக்களை நாம் மறத்தல் கூடாது. எனவே இங்கிலாந்திலே பொது நூலகம் பல்லாயிரக்கணக்கிலே நாடெங்கணும் தோன்றுமாறு மக்களை ஊக்குவித்த பெருமக்களிலே குறிப்பிடத்தக்க மூவரை நாம் இந்த இடத்திலே எண்ணிப் பார்த்தல் இன்றியமையாத ஒன்றாகும். அம்முப்பெரு நன்மக்களின் திருப் பெயர்கள் வருமாறு :—

1. வில்லியம் ஈவர்ட் (William Ewart), ச்காட்லாந்துப் பாராளு மன்ற உறுப்பினர்.

2. எட்வர்டு எட்வர்ச் (Edward Edwards), பிரிட்டன் பொருட்காட்சி உதவி அதிகாரி.

3. ஜோசப் பிரதர்டன் (Joseph Brotherton), லங்காஷயரின் பாராளு மன்ற உறுப்பினர்.

இங்கிலாந்து நாட்டுப் பாராளு மன்றம் எல்லோரும் செலவில்லாமல் பயன்படுத்தக்கூடிய பொது நூலகங்கள் பலவற்றை ஏற்படுத்துதற்குரிய வழி வகைகளை ஆராய்ந்து அறிக்கை ஒன்று தயாரித்தலுக்கு ஓர் ஆராய்ச்சிக் குழு ஏற்படுத்த வேண்டும் என்று பாராளு மன்றத்தை 1840-ல் தூண்டியவர் ஈவர்ட் என்பவராவர்.

இதற்கிடையில் எட்வர்ட்ச் என்ற நூலக வரலாற்றறிஞர், பொது நூல்கங்கள்பற்றிய தகவல்களையும் நடைமுறைகளையும் ஆராய்ந்து அறிந்து தொகுத்துவிட்டார். எனவே, ஈவர்ட் என்பவர், பிரதர்டன் என்ற பாராளு மன்ற உறுப்பினர் ஆதரவுடன் 1850-ல் பொது நூலகச் சட்டம் ஒன்றைப் பாராளு மன்றத்தில் கொண்டு வந்தார். இதைக் கண்ட பாராளுமன்றத்தில் ஒரு தன்னலக் கூட்டம்

எதிர்த்தது. அக்கூட்டம் பொதுமக்கள் அறிவு பெற்று வளர்ச்சி அடைவதை விரும்பாத பிற்போக்குக் கூட்டமாகும். அக்கூட்டம் எதிர்த்த போதிலும் நூலகச் சட்டம் நிறைவேற்றப் பட்டுவிட்டது. இதன்மூலம் நகர் மன்றங்கள், ஒரு பவுன் வருமானத்திற்கு ஓர் அரைப் பென்னி (Half penny) நூலகங்களுக்காகச் செலவிடலாம் என்ற நிலை ஏற்பட்டது. ஆனால் நூல்களுக்காக நகர் மன்றங்கள் செலவிடுதல் கூடாது; நூல்களை மக்கள் தாங்களாகவே வழங்கவேண்டும் என்றும் இச்சட்டம் கூறியது. இதுவும் இது போன்ற பிற கட்டுப்பாடுகளும் நூலகச் சட்டம் கொண்டுவந்ததின் நோக்கங்களைத் தடைசெய்து நிறைவேறிவிடாமல் செய்து வருகின்றன என்ற உண்மை விரைவில் எல்லோருக்கும் தெரியலாயிற்று. நாளடைவில் இத்தடைகளும் பின்னர் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட நூலகச் சட்டங்களால் நீக்கப்பட்டன. என்றாலும் நூலகங்கள் முழு வளர்ச்சியடைவதற்குரிய தடைகள் இருக்கவே செய்தன. அவற்றுள் குறிப்பிடத் தக்க தடையாவது :- ஒரு பென்னிதான் ஒரு நூலுக்குச் செலவிடல் வேண்டும்; பட்டியாட்சி மன்றங்களுக்கு (County Councils) நூலகம் ஏற்படுத்த அதிகாரம் இல்லை. இந்தத் தடைகள் 1919 ஆம் ஆண்டுவரை நீக்கப்படவில்லை.

## பொது நூலகங்கள்

மாஞ்செச்டர், நார்விச், போல்ட்டன் ஆக்ச்போர்டு, வின்செச்டர் ஆகிய நகரங்களில்தான் முதன் முதல் நூலகச் சட்டத்திற்குட்பட்ட பொது நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டன.

தொடக்கக் கல்விச் சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டாகிய 1870–ஆம் ஆண்டு வரையில் நூலகங்கள் மெதுவாகவே வளர்ந்து வந்தன. அந்த ஆண்டில் முப்பத்தைந்து நகரங்களில் பொது நூலகங்கள் பணியாற்றி வந்தன. அதற்குப் பின்னர் அவை நல்ல முறையில் விரைவாக வளரத் தொடங்கிவிட்டன. இவ் வளர்ச்சிக்குக் காரணம் கல்வி முன்னேற்றமே என்பதில் ஐயமில்லை. எனினும், பொதுமக்கள் சிலரின் பண உதவி நூலக வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது; அதிலும், செய்தி இதழின் செல்வ முதலாளியாக விளங்கிய பாசிமோர் எட்வர்ட்ஸ் (Passmore Edwards), நூலக வளர்ச்சியாளர் ஆண்ட்ரு கார்னீக் (Andrew Carnegie) என்ற இருவரும் நூலக வளர்ச்சிக்குச் செய்த பணி குறிப்பிடத்தக்க சிறப்புடையது. சட்டத்துக்குட்பட்ட முறையில் நூலகங்களை ஏற்படுத்த விரும்பும் அதிகாரிகளுக்கு நூலகக் கட்டிடங்களை அளிப்பதற்குரிய ஏற்பாடுகளைக் கார்னீக் என்பவர் தன் வாழ்நாளிலேயே செய்யலானார். 1913–ஆம் ஆண்டில், அவர் தான் எண்ணிய பணியை எண்ணியவாறு முடிப்பதற்குக் "கார்னீக் யுனைடட் கிங்டம் நிதியளிப்பகம்" என்பதை ஏற்படுத்தினார். தோன்றிய பொழுது இவ்வமைப்பு கார்னீக் தம் எண்ணப்படியே சிறந்த முறையிலே தொண்டு பல செய்திருக்கிறது. ஆனால் இப்பொழுது இதன் தொண்டு வேறு வழிகளிலே திசைமாற்றப் பெறுகிறது. நூலகத்திலே நூல்களைப் பெருக்கல், நூலகப் பணியக்களை அமர்த்தி வேலை செய்வித்தல், அவர்கள் பணிக்கு ஊக்கம் அளித்தல், ஆதரவு நல்கல், நூலகத்துறையிலே மாணவர்களைப் பயிற்சி பெறுமாறு செய்தல் போன்ற வேறு துறைகளிலேயே இன்று அந்த நிறுவனம் சிறப்பாகக் கவனம் செலுத்திவருகிறது.

1870 லிருந்து 1889 முடிய உள்ள பத்தாண்டுகளிலே நூலக ஆணைக் குழுவின் தொகை 153 ஆக அதிகரித்து விட்டது. அடுத்த பத்தாண்டுகளிலே இந்த எண்ணிக்கை இருமடங்காகி விட்டது. 1946-ல் 600–க்கு மேற்பட்ட நகர், சிற்றூர் நூலக ஆணைக் குழுக்கள் பணியாற்றத் தொடங்கின. அதுகால் இங்கிலாந்து, அயர்லாந்து ஆகிய இரு நாடுகளின் மக்கள்தொகை 48,000,000. இவர்களிலே 350,000 பேர்தான் பொது நூலகமில்லா ஊர்களிலே வாழ்ந்தனர். பொது நூலகமில்லா ஊரே இருக்கக் கூடாதுதான். ஆனால் இதற்கு முப்பதாண்டுகளுக்கு முன்னால் பாதி மக்கள் பொது நூலகமற்று வாழ்ந்தார்கள் என்பதை எண்ணுகின்றபொழுது, 1919 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பொது நூலகச் சட்டத்தினால் நூலகத் துறையிலே ஏற்பட்ட முன்னேற்றம் தெளிவாகத் தெரியத்தான் செய்கிறது.

சிற்றூர் ஆட்சி மன்றங்களாலும், ஊர் ஆட்சி மன்றங்களாலும், நகராட்சி மன்றங்களாலும் தற்போது பொது நூலகங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. பொது மக்கள் தரும் வரிப் பணத்திலிருந்து ஒரு பகுதி இந்த நூலகங்களுக்காகச் செலவிடப்படுகின்றது.

நகராட்சி மன்றங்களும் சிற்றூராட்சி மன்றங்களும் பொறுப்பு மிகவுடையன; அவை யாற்ற வேண்டிய கடமைகளும் பல. எனவே அவற்றைச் சரிவரச் செய்வதற்காகப் பற்பல குழுக்கள் ஒவ்வோர் ஆட்சி மன்றங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அத்தகைய குழுக்களில் ஒன்று கல்விக்குழு. அக் கல்விக் குழுவிலுள்ள உட்குழுக்களுள் ஒன்றே பொது நூலகக் குழு. இக்குழு நூலகத்தின் இன்றியமையாமை, தேவை ஆகியவற்றை ஆட்சி மன்ற

ளுக்கு எப்பொழுதும் உணர்த்திக் கொண்டே இருக்கும் அதுமட்டுமன்று; இக்குழு, மக்களுக்கும் நூலகத்துக்கும் இடையே நெருக்கமான உறவையும் தொடர்பையும் ஏற்படுத்துகின்றது. பொது நூலகங்களினால் பெரும்பாலும் பயன் அடைவோர் உள்ளூர் மக்களே. எனவே அந்நூலகங்களை ஓம்ப வேண்டியது உள்ளூராட்சி மன்றங்களின் கடனாகும். இதனால் அரசாங்கம் இந்நூலகங்களை மேற்பார்வையிடுவதும் இல்லை; கட்டுப்படுத்தலும் இல்லை. அரசாங்கம் ஊராட்சி மன்றங்களை நூலகம் திறக்க வேண்டும் என்று எப்பொழுதும் வற்புறுத்தியதே இல்லை.

ஆங்கிலப் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட நூலகச் சட்டத்தை ஊராட்சி மன்றங்கள் நிறைவேற்றுவது அவற்றின் விருப்பத்தைப் பொறுத்ததாகும். எவ்வளவு குறைவாகப் பணம் செலவழிக்க முடியுமோ அவ்வளவு குறைவான பணம் இவ்வாட்சி மன்றங்கள் நூலகத்துக்குச் செலவழிக்கலாம். இதனால் ஒவ்வொரு நூலகமும் செயற்படுகின்ற முறையும், அதனால் விளையும் பயனும் வெவ்வேறு வகையாக இருக்கும்.

ஒவ்வொரு நூலகத்துக்கும் ஒவ்வொரு தொகை செலவிடப்படுகிறது. ஒரு நூலகத்துக்கு ஆண்டொன்றுக்கு ஆயிரம் ரூபாய் செலவிடப்படுகின்றது என்றால், வேறொரு நூலகத்துக்கு இரண்டாயிரமும். மற்றொரு நூலகத்துக்கு ஐந்நூறும் செலவிடப்படும். இங்கிலாந்திலே 1947—48 ஆம் ஆண்டில் எல்லா நூலகங்களும் சராசரி தலைக்கு இரண்டு சில்லிங்கும் ஒன்பது பென்சும் செலவிட்டன. நகரங்களிலே சராசரிச் செலவு 3 சில்லிங் 8 பென்சு; சிற்றூர்களிலே சராச்ரிச் செலவு ஒரு

சில்லிங், பத்துப் பென்சு. ஆனல் ஒரு ஆண்டில் 76 நூலக அதிகாரிகள் 2 சில்லிங்குக்குக் குறைவாகவும் செலவிட்டனராம். நன்கு செலவிடப்பட்ட பகுதிகளிலே நூலகங்களுக்கெனச் செலவிடப்பட்ட தொகை, அரசாங்கச் சராசரித் தொகையைவிட மூன்று மடங்கு அதிகமானதாகும். இன்னும் சில இடங்களிலே நூலகங்கட்கு மிகவும் குறைவாகச் செலவிடப்பட்டுள்ளது.

சிறந்த நூலகங்களை நன்கு பொதுமக்கள் பயன்படுத்த வேண்டுமானல், நூலகங்களுக்குகென தலைக்குச் சராசரி பத்துப் பதினைந்து சில்லிங்குகள் செலவிடப்படல்வேண்டும். இக்கருத்தை நூலக நிபுணர் எல்லோரும் ஒத்துக் கொண்டுள்ளனர். அதனல் நூலகம் ஓரளவுக்கு முன்னேறத் தொடங்கியது. இவ்வளவு குறைவாகவே செலவிடப்பட்ட போதிலும் நூலகங்கள் மக்களுக்குப் பெரும் பயன் தந்து கொண்டுதான் உள்ளன. பொது நூலகங்களை ஏற்படுத்துவதிலே பொருட் சிக்கனமும் சிறந்த உதவியும் அடங்கிக் கிடக்கின்றன. ஒரு பரம்பரையினரால் வாங்கப்பட்ட நூல்கள் வழக்கொழிந்தாலொழிய, அந் நூல்கள் முழுதும் கிழியும் வரையில் பல பரம்பரை மக்களால் அடுத்தடுத்துப் படிக்கப்படும்; பயன்படும். அழுக்கடைந்த அல்லது சிதைந்த நூல் எதுவும் வழங்கப்படக் கூடாது என்பதை நூலக அதிகாரிகள் எல்லோரும் ஒத்துக்கொள்ளுகின்றனர். ஒரு நூல் பல மக்கள் படித்த பின்பே சிதைந்துவிடுகின்றது. நூலக அதிகாரிகள் தங்கள் நூலகத்துக்கு வருவோருக்கு வேண்டிய நூல்களைத் தேர்ந்தெடுத்து அளித்தல், குறிப்புக்களைத் தரல் போன்ற உதவிகளைச் செய்வதன் மூலம், தங்கள் அறிவையும் பயிற்சியையும் மேலுப்

மேலும் பெருக்கிக் கொள்ளுவதோடு, அத்துறையிலே சிறந்த வல்லுநராகவும் விளங்கலாம். வாரத்துக்கு ஒரு நூல் வீதம் வாங்கினால்கூட ஆண்டுக்கு இருபத்தைந்து பவுன் செலவாகும். மிகவும் மலிவாக விற்கும் தாள் அட்டை நூல்கள் (paper - backed editions) வாங்கினால்கூட ஐந்து பவுன் வேண்டும். சிறந்த படிப்பாளிகட்கு இதைவிட அதிகமாகச் செலவாகும். சிறந்த மாணவர், ஆராய்ச்சியாளர்கள் ஓரிரு வாரங்களுக்குள்ளே நூல்களுக்காக நூறு பவுனுக்கும் மேலாகச் சற்றும் தயக்கமின்றிச் செலவழிப்பர். ஒரு மாணவன் அவனுக்குப் பிடித்த அறிவுத்துறையிலே, அவ்வப்பொழுது வெளியாகும் ஆராய்ச்சிகளையும் உண்மைகளையும் அறிவதற்கும், அவன் வேண்டும் விளக்கங்களையும், குறிப்புகளையும் வேண்டும் சமயத்திலே, நூலக அதிகாரிகள் உடனே எடுத்து அளிப்பதற்கும், அவன்றன் ஊரிலே பொது நூலகம் இல்லாவிட்டால், நூல் விற்பனையாளர் நூற்றுக்கணக்கான பவுன்கள் செலவழிக்க வேண்டும். எனவே அந்த மாணவன் பெரும்பாலும் தன் நோக்கம் நிறைவேறாமலே செல்லுவான்; அதனால் அவன் துன்பம் பெற நேரிடும்.

அவன் வேண்டிய நூல்கள் கொடுக்கப்பட்டாலும், ஒவ்வொருவரும் நூலகத்தைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டால், செலவு உறுதியாக அதிகரிக்கும். சிற்றூராயினும் சரி, பேரூராயினும்சரி, ஏழையாயினும் சரி, செல்வராயினும் சரி, மூன்று பேருக்கு ஒருவர் நூலகத்தை முழு அளவில் பயன்படுத்துகின்றனர். ஏறத்தாழ ஒரு கோடியே நூறாயிரம் மக்கள் படிப்பதற்காக நூல்களை

வீட்டுக்கு எடுத்துச் செல்லுகின்றனர். இதனால் ஒவ்வொரு நாளும் பத்து நூறாயிர மக்கள் நூல்களை வாங்கிச் செல்லுகின்றனர் என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. ஏனைய மக்களிலே சிலர் குறிப்பு நூல்களையும், விளக்கத் துறை நூல்களையும், தனித்தொகுதிகளையும், மலர்களையும், நாள், வார, ஆண்டு வெளியீடுகளையும் பார்க்கின்றனர். வேறு சிலர் மருத்துவ மனை, பண்ணைகள், பள்ளிகள், தொழிற் பள்ளிகள், தொழிற்சாலைகள், விடுதிகள் ஆகியவற்றிலே உள்ள நூலகங்களைப் பயன்படுத்துகின்றனர்.

இங்கிலாந்திலே, 1924—1919 இடைப்பட்ட பதினைந்தாண்டுகளிலே நூலகத்தைப் பயன் படுத்துவோர் தொகை இரண்டு மடங்காகியது. ஏழாண்டுகள் கழித்து இத்தொகை மேலும் பன்மடங்கு அதிகரித்தது. இத்தொகை மேலும் அதிகரித்துக்கொண்டே சென்றது. 1947—1948 இடைப்பட்ட ஓராண்டிலே இருபத்தேழு கோடியே நாற்பது நூறாயிரம் நூல்கள் கொடுத்து வாங்கப்பட்டன.

நூலகத்தின் மதிப்பை நாம் கணக்கிடும்பொழுது சமுதாயத்தின் மீது மறைமுகமாக ஏற்பட்டுள்ள நூலகச் செல்வாக்கையும் நாம் நினைவுகூர்தல் வேண்டும். பொது நூலகம் எதிலும் மறைக்குக்கூட ஒதுங்காதவர்கள்கூட படித்தோர்தம் கழகங்களிலே உறுப்பினர்களாக இருப்பதன் மூலம் பயன்பெற்றிருக்கிறார்கள். வணிகம், தொழில், அறிவியல், கல்வி ஆகியவற்றிற்கு நூலகத்தினால் கிடைக்கும் பொருகவியானது பொது நலத்திலும் காணப்படுகிறது

பொதுமக்கள் பயன்படுத்தும் நூல்களின் முழுப்பயனும் மக்கட்குக் கிடைக்கிறது என்று யாரும் சொல்லமாட்டார்கள். மாறாக, பொது நூலகங்கள் சரிவரப் பணி செய்யுமானால், அடுத்த பத்து இருபதாண்டுகளிலே படிப்பகப் பயன் இரண்டு மடங்காகலாம்; அவ்வளவுதான்.

## நூலகச் சங்கம்

1807 ஆம் ஆண்டு நூலகச் சங்கம் (Library Associa-tion) ஒன்று லண்டன் மாநகரில் தொடங்கப்பட்டது. பொது நூலகத் தலைவர்களும், பிற நூலக அலுவலர்களும், நூலக வளர்ச்சியில் ஆர்வமும் அக்கறையும் காட்டியவர்களும் இச்சங்க உறுப்பினர்களாயினர். இச்சங்க உறுப்பினர்களில் குறிப்பிடத் தக்கவர் செப்பீல்டு நகரப் பொது நூலகத்தில் பணியாற்றிய தாமசு கிரீன் (Thomas Green) என்பவர் ஆவார். மேடைகள்தோறும் பேசியும், ஏடுகள்தோறும் எழுதியும், இல்லந்தோறும், மக்கள் உள்ளந்தோறும் நூலகங்களின் சிறப்பினைப் பதியவைத்தவர் இவரே. இலவசப் பொது நூலகங்கள் என்ற 463 பக்கங்கள் கொண்ட நூலொன்றை எழுதி வெளியிட்டார். இது நூலகத்துறை பற்றிய தலைசிறந்த நூல்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. நூலகங்களைப் பற்றிய செய்திகளையும் அவை புரியும் சேவைகளையும் விளக்கிப் புதிய முறையில் வெளியிடப்படட. இந்நூல் பல்வேறு தலைப்புக்களில் பல பதிப்புக்களாக உலகெங்கும் பரவின. கி. பி. 1910 இலிருந்து 1937 ஆம் ஆண்டுவரை இந்நூலின் பல பதிப்புக்களை வெளியிட்டவர் பிலிப்சு என்பவராவார். 1948 இல் இறுதியாக வெளிவந்த பதிப்பின் பதிப்பாசிரியர் சேம்சு ஒளார்க்காவர். எண்ணிறந்த மக்களுக்கு நூலகத்தைப் பற்றிய அரிய செய்திகளை விளக்கி, ஆயிரம் ஆயிரம் மக்-

களை அந்த அறப்பணியில் ஈடுபடுத்திய அருமையும் பெருமையும் அந்நூலுக்கு உண்டு. நூலகத் துறையைப் பற்றிய புள்ளி விவரங்களையும் செயல்முறைகளையும் இந்நூல் விளக்கமாக எடுத்துரைக்கின்றது. மேலும் இத்துறையில் ஈடுபடுவோர்க்குரிய தொழில் நுணுக்கங்களையும் தெளிவுபட இந்நூல் தெரிவிக்கின்றது. 1890–ஆம் ஆண்டில் வெளிவந்த மூன்ருவது பதிப்பில் நூலாசிரியர் "நான்கு ஆண்டுகட்கு முன்னர் 133 இடங்களில் தான் நூலகச் சட்டம் நிறைவேறியிருந்தது ; இன்று 208 இடங்களில் இந்நூலகச் சட்டம் அமுலில் இருக்கிறது" என்று எழுதி உள்ளார். இத்தகைய வளர்ச்சிக்கும் அறிவு மலர்ச்சிக்கும் காரணமாக இருந்தவர் அவரே. அத்தகைய பெரியாருக்கு நூலக உலகம் என்றென்றும் நன்றி பாராட்டும் கடப்பாடுடையது. வளர்ந்து வரும் நூலகத்துறையில் 1892-ஆம் ஆண்டில் மற்றெரு மறுமலர்ச்சி ஏற்பட்டது. இந்த மறுமலர்ச்சிக்குச் சேம்சுடப்பிரவுன் என்பவர் தந்தையாவார். புனைப்பெயருடன் இவரால் எழுதப்பட்ட நூலகத்துறை பற்றிய அளவிறந்த கட்டுரைகள் மக்களிடையே அறிவாற்றலையும் விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தின. நூலகத்திற்கு வரும் மக்கள் பிறர் உதவியின்றி உளம் விரும்பிய நூல்களோடு உறவாட வேண்டும் என்னும் உயரிய நோக்கத்தால் 'விரும்பின படிக்கும் நூலக முறையினை' (Open Access System) உருவாக்கியவர் இவரே. கிளார்க் கென்வெல் (பின்சுபரி) நூலகத்தில் முதன் முதலில் இம்முறையினை நடைமுறைக்குக் கொண்டுவந்து வெற்றி பெற்றவரும் இவரே. இம்முறையினுல் நூலகத்திற்கு வரும் மக்கள் எவர் உதவியுமின்றித் தாங்கள் விரும்பு

கின்ற நூல்களை எளிதாக எடுத்துக் கொள்ளலாம். இன்று இம்முறைதான் உலகில் பெரும்பான்மையான நூலகங்களில் நடைமுறையில் உள்ளது.

இன்று ஒரு சில இடங்களுக்குத்தான் நூலக வசதி இல்லையென்று கூறலாம். அவ்விடங்கள் அனைத்திலும் வாழும் மக்கள் தொகை, 60,000 என்றும், இங்கிலாந்து நாட்டிலே அச் சிறுபான்மையோர் தவிர மற்ற எல்லா மக்கட்கும் பொது நூலக வசதி இருக்கிறதென்றும் அறிக்கை ஒன்று கூறுகின்றது. மேலும் நூலகக் கூட்டுறவு முறையில் (Library Cooperation) எல்லாப் பொது நூலகங்களும் ஒன்றோடொன்று தொடர்புடையனவாய், பார்வியக்கும் வண்ணம் பணியாற்றுகின்றன. இன்று உலக நாடுகளில் இங்கிலாந்தில்தான் நூலகக் கூட்டுறவு முறை சீரிய முறையில் நடைபெறுகின்றது எனக் கூறலாம். தேசிய மத்திய நூலகத்துடன் எல்லா வட்ட மத்திய நூலகங்களும், எல்லா வட்ட மத்திய நூலகங்களுடன் அந்தந்தப் பகுதியில் இருக்கும் அனைத்துப் பொது நூலகங்களும் இணைக்கப்பட்டுள்ளன. இம்முறை வெற்றி பெறுவதற்குக் கார்னீக் நிதியிலிருந்து பெருந்தொகை செலவழிக்கப்பட்டது. இதற்கிடையில் நூலகச் சங்கத்திற்குப் பேரரசி விக்டோரியா கி. பி. 1898-ல் அரசியல் ஒப்பம் அளிக்கவே, நூலகச் சங்கத்தார் இதன் பின்னர் நூலகங்களில் திறமையுடன் பணிபுரிவதற்குத் தகுதி வாய்ந்த வல்லுநர்களை உருவாக்குவதில் முனைந்தனர். கி. பி. 1885—ல் முதன் முதலில் இச் சங்கத்தார் நூலகத்தார் தேர்வு ஒன்று நடத்தி வெற்றி பெற்றவர்களுக்குச் சான்றிதழ்கள் நல்கினர். நாளடைவில் படிப்பின் தரம் உயர்த்தப்பட்டது. நூலகக் கல்வித் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. 1928—ல் பதிவு

செய்துகொண்ட நூலகத்துறை வல்லுநர்களுக்கு அவர்கள் தகுதிக்கும் அனுபவத்திற்கும் ஏற்ப அறிஞர் (Fellow), துணையறிஞர் (Associate) என்ற பட்டங்கள் கொடுக்கப் பட்டன. இன்று திறமையும் அனுபவமும் வாய்ந்தவர் கள்தாம் இச் சங்கத்தாரால் நடத்தப்படும் தேர்வினை எழுதுதற்குத் தகுதி வாய்ந்தவர்கள் எனக் கருதப்படுகின் றனர். நூலகத் துறையில் பணிபுரிய விரும்பும் எவரும் முதலில் தங்களைப் பதிவு செய்துகொள்ளுதல் வேண்டும். இன்று இந்நாட்டில் பொதுநூலகத் துறையில் பத்தாயிரத் திற்கு மேற்பட்ட மக்கள் பணி புரிகின்றனர். இவர்களில் மூவாயிரத்திற்கு மேற்பட்டோர் நூலகச் சங் கத்தாரால் நடத்தப்படும் இறுதித் தேர்வில் வெற்றி பெற் றுப் பதிவு செய்யப்பட்ட நூலகர்களாகும். இவ்வாறு நூலகச் சங்கம் திறமையும் பயிற்சியும் உடைய நூலகர் களை நாட்டிற்கு நல்கியதோடமையாது, நூலக மாகநாடு கள் கூட்டியும், சொற்பொழிவுகள் நிகழ்த்தியும், நூலகங் களைப் பற்றிய செய்திகளை அவ்வப்பொழுது மக்களுக்கு வெளியிட்டும், பாடநூல்களை அச்சிட்டும், மக்களை நூலக மனப்பான்மை உள்ளவர்களாய் மாற்றியமைத்து, பொது மக்கள் வாழ்விலே, பொதுநூலகத் துறையிலே, ஒரு மறு மலர்ச்சியை ஏற்படுத்தியது என்பது எவரும் மறுக்க முடி யாத உண்மையாகும். இந் நாட்டு மக்களில், மொத்த மக் கள் தொகையில் கால் பாகத்திற்கு மேற்பட்டவர்கள் இன்று பொது நூலகங்களை ஒழுங்காகப் பயன்படுத்துகின் றனர். அண்மையில் தரப்பட்டுள்ள புள்ளி விவரங்களின் படி 30 கோடிக்கு மேற்பட்ட மக்கள் இப் பொது நூலகங் களால் பயன்பெறுகின்றனர். 23,000-க்கு மேற்பட்ட இடங்களில் நூல்கள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு

நூலகத்திலும் பல பகுதிகள் பாங்குடன் விளங்குகின்றன. உடன் உதவும் நூற் பகுதி (Reference Section) ஒன்றுதான் அனைவராலும் விரும்பப்படும் தலைசிறந்த பகுதியாகும். மழலை மொழி பேசும் குழந்தைகட்கும், பள்ளி செல்லும் சிறார்க்கும், மருத்துவக் கூடத்தில் இருப்பவர்களுக்கும், ஆண்டில் முதிர்ந்தவர்கட்கும் இப் பொது நூலகங்கள் நூல்களை அனுப்பி அவர்களுக்குப் புத்துயிர் அளிக்கின்றன. மேலும் நூலகங்களில் அடிக்கடி சொற் பொழிவுகளும், சொற்போர்களும் நடத்தப்படுகின்றன. இசையின் இனிமையினைப் பருக விரும்புவோர் நூலகங்களுக்குச் சென்று இன்னிசை கேட்டு மகிழலாம். நூல்களைப் போன்று இசைத் தட்டுக்களையும் வீட்டிற்கு எடுத்துச் சென்றுவரலாம். இடையிடையே செய்திப் படங்கள் சிறந்த களிக்கக் காட்டப்பெறும். மேலும் அடிக்கடி பொருட்காட்சிகள் பல நூலகத் துறையினரால் நடத்தப் படும்.

# 3. நகர நூலகம்

பொது நூலகம் மூன்று சிறந்த பணிகளைச் செய்கின்றது. (1) வீட்டிலே வைத்துப் படிக்க நூல்களை வழங்கல், (2) குறிப்பு நூலகத்தின் மூலம் ஆராய்ச்சி மாணவர்களுக்கு வேண்டிய குறிப்புக்களை வழங்கியுதவல், (3) நாள், வார முதலிய பருவ வெளியீடுகளை வழங்கல்.

சிறு நூலகங்கள் பெரும்பாலும் மேலே கூறியவற்றில் ஓரிருபணிகளை மட்டும் செய்யும். பெரிய நூலகங்கள் மேற்கூறிய பணிகளோடு, வேறு பல உதவிகளும் வாய்ப்புக்களும் அளிக்கும்.

மேற்கூறிய நூலகப் பணிகளை, நாற்பதாயிரம் மக்களுடைய ஒரு நகர நூலகத்தை ஆராய்ந்தால் அறிந்து கொள்ளலாம். ஒவ்வொருவரும் நகரிலேயே வாழ்வதால், அதற்கு ஒரு நூலகக் கட்டிடம் போதுமானதாகும். நூலகம் நகரின் நடுவிலாவது கடைத்தெருக்களுக்குச் சற்றே தள்ளியாவது அமைக்கப் பட்டிருக்கும். பெரும்பாலும் அந்த நூலகக் கட்டிடம் முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டதாகவும், சிற்பவேலைப்பாடுகள் மிகவுடையதாகவும் இருப்பதியல்பு. அதனால் தற்காலத்து அக் கட்டிடம் போதுமானதாக இருக்காது. தற்காலத்திலே ஒரு நூலகக் கட்டிடம் கட்டப்பட்டுளது என வைத்துக் கொள்ளுவோம். நூலகத்

துக்கெனத் தனியமைப்புடைய கட்டிடம் ஒன்றும் இதுவரையும் கண்டுபிடிக்கப்படா விட்டாலும், இது தான் நூலகக் கட்டிடம் என்று கண்டுபிடிப்பதில் கடினம் உறுதியாக இருக்கும். ஏனென்றால், பெரும் பாலும் நூலகக் கட்டிடம் ஒரு மாடியுள்ளதாக இருக்கும். சில நூலகங்களிலே, தரையிலிருந்து கூரைவரையில் சுவர்களில் சாளரங்கள் இருந்தபோதிலும், பெரும் பாலான நூலகங்களிலே, தரைமட்டத்திலிருந்து ஆற டிக்கு மேற்பட்டே சாளரங்கள் அமைக்கப்பட்டிருக்கும். சாளரங்களின் வழியாக வருவோர் நூல் அறைகளை நன்கு காண வாய்ப்புண்டு. ஊர்திகளும், மிதிவண்டி களும் நிற்பதற்குரிய பூங்காவை முன் கொண்டு நூலகம் தெருவை நோக்கி அமைந்திருக்கும். நூலகக் கட்டிடம் எந்தவிதச் சிற்ப வேலைப்பாடுமின்றி 'மொழு மொழு' என்று காணப்படும். வாயிலிலே ஒரு சிறிய கூடம் (Hall) இருக்கும். நூலகத்தின் பின்பகுதியிலே சிறுவர் நூலகம் இருக்கும். சிறுவர் நூலகம் முன்புறத்திலே தெருவின் அருகிலே இருக்குமானால், போக்குவரத்து அதிகமாக இருப்பதால் தீங்கு நேரும் என எண்ணிச் சிறுவர்கள் நூலகத்திற்கு வரத் தயங்குவார்கள்.

நீங்கள் நூலகத்துக்குள் நுழைந்த பொழுது அங்கே வேண்டிய வெளிச்சமும் இடமும் காற்றும் உங் களை 'வருக வருக' என வரவேற்கும். நூலறையும், சாய்வு மேசையும் தூய்மையாக நூல் குவியல் இன்றிக் கண்ணைக் கவர்ந்து நிற்கும். நூல் எடுத்திடும் நூல றைகட்கு அல்லது அலமாரிகட்கு அருகிலே மக்கள் கூட் டமாக நின்றபோதிலும், ஒவ்வொருவரும் பிறரை

மெருக்காமல் நூல்களைத் தேர்ந்தெடுக்கலாம். நூல் தட்டுகள் பெரும்பாலும் சுவர்களை ஒட்டி, நாம் முழந்தாளிட்டு எடுக்க வேண்டியதின்றி எளிதாக எடுக்கக் கூடிய அளவிலேயே அமைக்கப்பட்டிருக்கும். குறிப்பு நூலகத்திலே, நமக்கு வேண்டிய நூல்களையெல்லாம் இடையூறின்றிப் பரப்பிக் கொள்ளத்தக்க நலம் வாய்ந்த மேசையும், மணிக்கணக்காக இருப்பினும் கடுப்பேற்படுத்தாத நாற்காலியும் போடப்பட்டிருக்கும்.

பொது நூலகந்தான் அதிகமாகப் பயன்படுத்தப் படுகின்ற நூலகமாகும். அழகான நெடுங்கதைகளோடு ஒவ்வொரு பொருளைப் பற்றிய நூல்களும் அங்கே ஓரளவிற்கு வாங்கி வைக்கப்பட்டிருக்கும். சிறிய நூலகங்களிலே, இன்றியமையாத பொருள் பற்றிய நூல்கள்தாம் இருக்கும். ஒரு நல்ல நூலகம் அறிவுலகக் கண்ணுடி; கற்பனை ஓவியம்; நன்மக்களின் உள்ளத்திலே எழுகின்ற பலதுறை எண்ணக் குவியல்களைக் காட்டும் களஞ்சியம். இங்கிலாந்து நூலகங்களிலே, நெடுங்கதைகள் நீங்கலாக, ஏனைய நூல்கள், பொருளுக்கேற்றவாறு தனித்தனியாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இதனுல் ஒரு பொருள் பற்றிய நூல்கள் அனைத்தும் ஒரே இடத்தில் காண வாய்ப்புண்டு. பிறகு பொருள்கள் எல்லாம் தத்தம் இனப்பொருள்களோடு சேர்க்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பொருளுக்கேற்றவாறு நூல்களைத் தனியே அடுக்கி வைப்பதனுலும், தொடர்புடைய பொருள்களை அடுத்தடுத்து வைப்பதனுலும், ஒரு குறிப்பிட்ட பொருள் பற்றிய எந்த நூலாயினும் எளிதிலே எடுக்க முடிகிறது. அதே நேரத்தில் அந்நூல் எடுப்பவன் அந்நூற்

பொருளோடு தொடர்புடைய பிற பொருள் நூல்களையும் பார்க்க ஏதுவாகிறது. பெரும்பான்மையான நூலகங்கள் 'டூயி' பதின்முறை (Dewey Decimal Classification) என்ற முறையைப் பின்பற்றித்தான் நூல்களைப் பத்து வகையாகப் பிரிக்கப்பட்டு தனித்தனியே அடுக்கிவைக்கப் பெற்றுள்ளன.

1. பொது நூல்கள்.
2. மெய்யுணர்வு நூல்கள்.
3. சமய நூல்கள்.
4, சமுதாய நூல்கள்.
5. மொழி நூல்கள்.
6. இயற்கைப்பாட நூல்கள்.
7. பயன்கலை நூல்கள், செய்முறை அறிவியல் நூல்கள்.
8. நுண்கலை நூல்கள்,
9 இலக்கிய நூல்கள்.
10. வரலாறுகள் (பூகோள நூல், பயண, தன் வரலாற்று நூல்கள்).

மேற்கூறிய ஒவ்வொரு துறையும் மேலும் பத்துப் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றது. எடுத்துக்காட்டாக அறிவியல்என்பது பொது அறிவியல், கணிதம், வான நூல், பொறி நூல், கலவை நூல், நில நூல், பூநூல் (Palanthology), உயிர் நூல், மர நூல், விலங்கு நூல் என்று பிரிக்கப்படும். இப்பிரிவினை மேலும் மேலும் பிரிவுண்டு, இறுதியிலே, ஒரு குறிப்பிட்ட பொருளை அடையும்.

பிரௌன் பொருட் பிரிவு (Brown Subject classification) போன்ற சில பிரிவுகளை, ஒரு சில சிறு நூலகங்கள் மேற் கொண்டுள்ளன, பல்கலைக்கழக நூலகம், ஆராய்ச்சி நூல

ம் போன்ற பெரிய நூலகங்கள் காங்கிரசு பதிவு நூலக முறை அல்லது டூயியினுடைய பிரெசல் (Brussels) விரிவு முறையைப் பின்பற்றுகின்றன. அதுவுமன்றி, சேர்க்கப்பட்ட நூல்களின் குறிப்பிட்ட தேவைக்கேற்ற பிரிவுகளைச் சில நூலகங்கள் மேற்கொள்ளுகின்றன. ஆனால், மிகச் சிறு நூலக முதல் பெரிய நூலகம் வரையுள்ள எல்லா நூலகங்களும் உலக முழுதும் பரவிய 'டூயி' முறையையே பின்பற்றியும், பரப்பியும் வருகின்றன. ஏனென்றால், இம்முறையினால் ஒரு நூலகத்திலே தன் விருப்பம் போல நூல் எடுக்கப் பழகிய ஒருவன், ஏனைய எல்லா நூலகங்களிலும் நுழைந்து, தன் விருப்பம் போல நூல்களை எடுக்கமுடியும் என்பதால் என்னலாம்.

நூல் தட்டுகளிலே எத்தனை வகையான நூல்கள் உள்ளனவோ, அத்தனை வகையான மக்களும் உளர். குழந்தைகள் நீங்கலாக உள்ள மக்கள் வெவ்வேறு வயதினர்; வெவ்வேறு வாழ்க்கையினர். அங்கே சாதிப் பிரிவினை இல்லை. நூலகங்களிலே நூல்கள் எடுக்கவும், நூலகத்தார்தம் உதவியைப் பெறவும், ஏழ்மை, செல்வ நிலை எதுவும் தடையாக நிற்பதில்லை.

நூலகத்திற்குள் நுழைந்த ஒருவன் எப்படி நூல்களை எடுக்கிறான் என்பதைப் பார்க்கலாம். நூலக வாயில் அதிகாரியிடம் சென்ற அவன், தான் படித்துவிட்ட நூல்களை அவரிடம் கொடுத்துவிட்ட பின்னர், தன் அட்டைகளை வாங்கிக் கொள்கிறான். இங்கிலாந்திலுள்ள எல்லா நூலகங்களும், அட்டை முறையையே மேற்கொண்டுள்ளன. ஒவ்வொருவனுக்கும் ஒன்று, இரண்டு அல்லது அவற்றுக்கும் அதிகமான அட்டைகள் கொடுக்

கப்படும். ஒவ்வொரு நூலிலும், அதன் அட்டையில் ஓர் அட்டைப்பையும் அட்டையும் இருக்கும். அட்டையில் நூலின் பெயர், நூலாசிரியர் பெயர், நூலின் எண் ஆகியவை குறிக்கப்பட்டிருக்கும். நூல் எடுப்போர் கையிலுள்ள அட்டை வெற்றிலைப் பையைப் போன்றிருக்கும். ஆனால் வெற்றிலைப்பையின் நுனியைப் போன்றிராமல், மட்டமாக அட்டையின் நுனி இருக்கும். நூலிலுள்ள அட்டை எடுக்கப்பெற்று, நூல் வாங்குவோர் அட்டைப் பையில் வைக்கப்படும். பிறகு அந்த அட்டை இணை, நூல் திரும்புகையில் எளிதில் எடுத்தற்கேற்ற நிலையில் அடுக்கிவைக்கப்படும். நூல் திரும்புகையில், நூலட்டை, அட்டைப் பையினை விட்டு, நூலட்டைப் பைக்குள் சென்றுவிடும். நூல் வாங்குவோர், அட்டையைத் திரும்பப் பெற்றுக்கொள்வர்.

இங்கிலாந்திலுள்ள ஒவ்வொரு பொது நூலகமும் திறந்த முறையையே (Open access) மேற்கொண்டுள்ளது. திறந்த முறை என்றால், வருவோர், நூலகத்திற்குள் நுழைந்து, தம் விருப்பம்போல் எந்த நூலையும் எடுக்கும் முறை என்று பொருள். 19ஆம் நூற்றாண்டின் இறுதி வரை இந்த முறை பழக்கத்தில் இல்லை என்று சொல்லலாம். முற்கால நூலகத்தலைவர்கள் நூல்களை வழங்குவதைவிடக் காத்தலையே பெரிதும் ஓம்பினர். எனவே அக்காலத்திலே நூல் எடுப்போர் நூல் பட்டியல் தொகையைப் பார்க்கவேண்டும். அதிலே தமக்கு வேண்டிய நூலின் பெயரை நூலகத்தாருக்குக் குறிப்பிடவேண்டும். நூலகத்தார் நூல்காட்டி கொண்டு, அவர் விரும்பும் நூல் உள்ளதா, இல்லையா என்பதைப் பார்ப்பர். இருப்பின் நூல் வழங்கப்படும். ஓர் ஐம்பதாண்டுகளுக்கு முன்

னர் ஒருவர் தோன்றி, நூலக உலகிலே ஓர் அரும் புரட்சி செய்யலானர். அப் புரட்சிவீரர் பெயர் சேம்சுடப்பிரௌன் (James Duff Brown) என்பதாகும். அவர் கிளெர்கன் வெல் என்பதில் நூலகத் தலைவராக இருந்தார். அவர் தாம் முதன் முதலில், பொதுமக்கள் மீது நம்பிக்கை வைத்து, அவர்களைத் தாராளமாக நூலகத்திற்குள் நுழைந்து, தம் விருப்பம்போல நூல்களை எடுத்துப்போக விட்டார். இந்தத் திறந்த முறை அதற்குப் பின்னர் எல்லா நூலகத்தாராலும் போற்றிக்கொள்ளப்படுவ தாயிற்று. இக்காலத்திலே, மக்கள் தங்கள் விருப்பம்போல நூலகத்திலே நூல்களை எடுக்கலாம். அவ்வாறு அவர் களே நூல்கள் எடுப்பதனுல், நூல்களைப் பற்றிய அவர் தம் அறிவு மேலும் பெருக வாய்ப்புண்டு. திறந்த முறை யினுல் இரு பெரு நன்மைகள் ஏற்படுகின்றன. பழைய முறைகள் புதுப்பிக்கப்படுதலும், நூலார்வம், நூல் பற் றிய அறிவு ஆகியவை பெருக்கமடைதலும் ஆம். இந்தச் சீரிய திறந்த முறை இதுவரையிலும் பின்பற்றப்படாத நாடுகளிலுள்ள நூலக அதிகாரிகள், இம்முறை, நூல்கள வாடல், நூல்வரிசை சிதைத்தல், சிற்றின்ப நூல்களைப் படிக்கத் தூண்டுதல் ஆகிய செயல்களைப் படிப்பா ரிடையே ஏற்படுத்தாதா என்று வினவுகின்றனர். இவ் வினக்கள் வினவப்பட வேண்டியனவே. இம்முறை யினுல் சில நூல்கள் மறைதல் உண்மையே. திறந்த முறையில், நூல்கள் முறை பிறழ்ந்து, வரிசை தவறிக் குலைந்துபோதல் உண்டு. அதற்காக, ஒவ்வொரு நாளும் நூல்கள் சரிபார்க்கப்பட்டு, முறையாக அடுக்கப்படல் வேண்டும். திறந்த முறையில் ஏற்படும் நன்மை, அதனுல் ஏற்படும் தீமையைவிட மிகப் பெரியதாகும். இம்முறை

படிப்பார் உள்ளத்திலே தாழ்ந்த எண்ணங்களை உண்டாக்குவதில்லை. இதனால், மக்கள் நூல்களை நன்கு கற்றுப் பெரும்பயன் அடைகின்றனர். எனவேதான், திறந்த முறை மிகவும் இன்றியமையாத ஒன்று என்று ஒருமுகமாக இங்கிலாந்திலுள்ள நூலக அதிகாரிகள் முழங்குகின்றனர்.

பெரும்பாலோர் பொழுதுபோக்கை விரும்புகின்றனர் அதுவும் நல்வழியிலே பொழுதைப் போக்க விரும்புகின்றனர். எனவே அவர்கள், நெடுங்கதை, நாடகம், பேர் பெற்ற வாழ்க்கை வரலாறு, பயண நூல் ஆகியவற்றைப் படிக்கின்றனர். பொழுதுபோக்குக்காகப் படிப்போருக்கு உதவுதல் நூலகத்தார் கடன். அதனால், நெடுங்கதை போன்ற எளிய நூல்களை நூலகத்தார் வெறுப்பதில்லை. இந்நூல்களை வழங்கும் அதே நேரத்திலே, நூல்களின் தரத்தையும் நூலகத்தார் காத்துக்கொள்கின்றனர்.

பெரும்பாலான படிப்பு ஆதாயங் குறித்த ஒன்று அன்று. விருப்பங் காரணமாகவே நூல்கள் படிக்கப்படுகின்றன. ஏனையவர்கள் குறிக்கொண்டே படிக்கின்றனர். தேர்வுக்குப் படிப்போர், பல்கலைக் கழக மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் ஆகியவர்கள் பொது நூலகத்தைப் பயன்படுத்துகின்றனர். ஏனையோர் தாம் மேற்கொண்ட தொழில் முன்னேற்றத்துக்காக நூலகத்தை நாடுகின்றனர். பொது நூலகத்தினால், நடப்பு வளர்ச்சிகளை அறிந்து காத்தல், நாளுக்கு நாள் தோன்றும் சிக்கல்களைத் தீர்த்தல், எடுத்த கருமத்தினைச் செய்யும் திறனும் சிறந்த தகுதியும், கருமத்தில் வெற்றியும் அடைவதற்குரிய சீரிய அறிவைப் பெறுதல் ஆகியவற்றை நாம்

பெறலாம். சிறந்த உலகின் சீரிய குடிமகனுக விளங்க வேண்டுமெனும் வேட்கைமிக்க ஒருவன், நல்லரசு, உள்ளாட்சி, நாட்டாட்சி, உலகாட்சி ஆகியவற்றைப்பற்றிச் சிறந்த அறிவு பெறுவதற்கும், பொருளாதார, சமுதாய நிலைமைகளை அறிந்து போற்றற்கும் பெரிதும் விருப்பங் கொள்கின்ருன். சமைக்க, தோட்டம் அமைக்க, தட்டுமுட்டுப் பொருள்கள் செய்ய, வீட்டைப் பழுதுபார்க்க, புத்தம் புது விளையாட்டுக்கள் ஆட, நெய்ய, இதுபோலப் பல காரியங்கள் செய்யச் சிலர் நூலகத்தை நாடுகின்றனர். அயல் மொழிகளைக் கற்கச் சிலர் நூலகம் செல்லுகின்றனர். இன்னும் நூலகம் நாடுவோரின் வகையை நாம் விரித்துக்கொண்டே போகலாம்.

நூலகம் ஏற்படுத்தல் என்பது பலபொருள் பற்றிய பலவேறு நூல்களை வழங்குதல் மட்டுமன்று; பல காரியங்களுக்காக வருகின்றவருக்கு ஏற்ற முறையிலே, ஒரு குறிப்பிட்ட துறையிலே தோன்றிய கருத்துக்கள் எல்லாவற்றையும் கொண்ட நூல்கள், பொருட்பிரிவுகள் கொண்டு இலங்குதல் வேண்டும். எல்லாவித நூல்களும் நூலகத்திலே இருத்தல் வேண்டும். நூலகத் தலைவரின் முக்கிய வேலையே, சரியான நூல்களை வாங்கிவைத்தல் மட்டுமன்று; அவற்றை விரும்புவார் கையில் கிடைக்கவும் செய்வதே ஆம். நூலகம் வருவோர் சிறந்தவர் உதவியை வேண்டுவர். எனவே பிரிட்டன் நூலகங்களிலே, நீண்ட நாள் பணிசெய்த நூலகத்தலைவர் எப்பொழுதும் இருப்பர்.

பயன் மிக்க, இன்பந்தரவல்ல எல்லாவித நூல்களையும் படிப்பதனுல் மக்கள் சீரிய அறிவு பெறுகின்றனர்

என்பது இங்கிலாந்து நூலகத்தாரின் சிறந்த கருத்தாகும். இங்கிலாந்திலே நூலகத்தார் தாமே சென்று வருவோருக்கு உதவி புரிவதும். நூலகம்பற்றி அறிவுறுத்துவதும் இல்லை. வருவோர், உதவி வேண்டுகின்றவரையிலும் காத்திருத்தல் வழக்கமாகும். ஆனால், வேண்டப்படும் உதவி சிறிதாயினும் சரி, பெரிதாயினும் சரி, உதவி வேண்டுவோன், உதவி செய்யப்படாத முறையில், நூலகத்தினின்று போதல் கூடாது என்று நூலகத்தார் எண்ணுகின்றனர்.

ஒரு நூலகத்திலே எத்தனை நூல்கள் இருத்தல் வேண்டும்? இந்த வினவுக்கு உடனே ஒரு வரியில் விடையிறுத்தல் இயலாது. ஏன் என்றால், எண்ணிக்கையை விடத் தரம் முக்கியம்; மிகச்சிறிய நூலகத்தில் கூட, சிறந்த நூல்கள் இருத்தல் வேண்டும். எனவேதான், நூலகம், நிறைய நூல்களை வாங்கிவைத்து எல்லோருக்கும் வழங்குகிறது. மேலும், நூலகத்திலே நெருக்கடி அதிகமானால், நூலகத்தின் நூல்களிலே பெரும்பகுதி நூலகத்திலன்றி, மக்களுடைய இல்லங்களிலே இருக்கும். பொதுவாக, ஊர் மக்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நூல் கொடுக்கின்ற அளவுக்கு நூல்கள் ஒரு நூலகத்திலே இருக்குமானால் அதுவே போதுமானதாகும். பெருவாரியான நூலகங்களிலே எடுத்துச் செல்லப்படும் நூல்களிலே நெடுங்கதைகளே அதிகமாக இருந்தபோதிலும், நூலகத்திலே நெடுங்கதை நூல்களின் எண்ணிக்கை மிகக் குறைவே. இந்த வேற்றுமைமைக்கு மூன்று காரணங்கள் உண்டு :

1. நெடுங்கதை தவிர, ஏனைய நூல்களின் எல்லை மிக விரிந்தது.

2. பொதுவாக நெடுங்கதை படிப்போர் தொகை மிக அதிகம்; ஒரு நெடுங்கதை இல்லாவிடில் வேறொரு நெடுங்கதை எடுத்துப் படிக்க நெடுங்கதை விரும்பிகளுக்கு வாய்ப்புண்டு. ஆனால் பிறர்க்கு அவர் வேண்டிய ஒரு நூலுக்குப் பதிலாகச் சரியான வேறு நூல் கிடைத்தல் இயலாது.

3. நெடுங்கதைக்குக் குறிக்கும் காலத்தின் அளவை விடப் பிறவற்றுக்குக் குறிக்கும் காலம் மிக நீண்டது.

வழங்கு எண்கள் படிப்பின் தரத்தைத் தவருகக் காட்டும் இயல்பின. நெடுங்கதை பற்றித் தற்கால நூலகங்கள் கவலைப்படுவதில்லை. பிற துறை நூல்கள் வேண்டிய அளவுக்குத் தரப்படுமானல், மக்கள் நூலகத்தை நல்ல முறையில் மிக அதிகமாகப் பயன்படுத்த விரைவில் தொடங்கி விடுவர் என்பதை நூலக அதிகாரிகள் அறிவார்கள். நல்ல நெடுங்கதைகள் நூலகத்தில் இருக்குமானல், பிற நூல்களைப்பொதுவாகவும், நெடுங்கதையைச் சிறப்பாகவும்படிப்போர், அதனல் பெருமகிழ்ச்சியும், மாற்றமும், மறுமலர்ச்சியும், புத்துணர்வும், அறிவும் பெறுவர்.

பொது நூலகத்திலிருந்து நூல்களை வீட்டுக்கு எடுத்துச் செல்லலாம்; குறிப்பு நூலகத்து நூல்களை வீட்டுக்கு எடுத்துச் செல்ல முடியாது; அங்கேயே வைத்துப் படித்தல் வேண்டும். இன்னும் தெளிவாக உரைக்க வேண்டுமானல், நூலகம் என்பது ஓர் அறிவிப்புக் கழகம்; ஒரு தொழிற்சாலை. நூலகம் வருவோரில் பெரும்பாலோர், குறிப்பிட்ட ஏதேனும் செய்தியோ, தேதியோ, ஆண்டோ குறிக்கத்தான் வருகின்றனர். எனவே, நூலகத்தின் முக்

கிய வேலை, பொதுவான, சிறப்பான அகராதிகள், கலைக் களஞ்சியங்கள், அயல் நாட்டு அகராதிகள், ஆண்டு நூல்கள், வழிகாட்டிகள், உலகப்படங்கள், அறிக்கைகள் அரசினர் வெளியீடுகள், பாராளுமன்றச் சட்ட நூல்கள், அரசாங்க விதி நூல்கள், கணிதப் பட்டியல்கள், அட்டவணைகள், தொழிலக வெளியீடுகள் முதலிய பல துறை நூல்களையும் நூலகம் சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டும். இவற்ரேடு, பாட நூல்கள், முக்கியமான அறிவுத் துறை நூல்கள், பருவ வெளியீடுகள், செய்திக் குறிப்புக்கள், துண்டு வெளியீடுகள், அட்டவணைகள் ஆகியவற்றையும் சேர்த்துவைத்தல் வேண்டும். ஒரு சிலர் தவிரப் பெரும்பாலோர் தாங்கள் விரும்பும் நூலையோ, அறிக்கையையோ எடுக்க நூலகத்தார் உதவியை வேண்டுவர். நூலகத்தாரது பயிற்சியும் பழக்கமும் இந்த இடத்தைத் தவிர வேறெங்கும் வேண்டியதில்லை. தகுதியுடைய நூலக உதவியாளர் ஆயிரக்கணக்கான விஞக்களுக்கு விடைகூற வேண்டியது அவரது வேலையின் பெரும்பகுதியாகும். கடினமான சிக்கலுக்கு, நல்ல நுட்பமான முறையைக் கையாளலாம். அதனுல், வீண்வேலை கிடையாது. நூலகத்தில் உள்ளவை எவை, இல்லாதவை எவை என்பதை அவர் அறிவார்; இருப்பன உள்ள இடமும், எடுக்கும் விதமும் அவருக்குத் தெரியும். அவற்ருல் வேண்டியன அளிக்க முடியாவிடில், வேறெங்குத் தேடுவது என்பதும் அவருக்குத் தெரியும்.

குறிப்பு நூலகத்துக்கு எந்த நேரத்திலும் பலர் வருவர். அதற்குக் காரணங்கள் வருமாறு: வீட்டைவிட நூலகம் படிப்பதற்கேற்ற இடமாக இருக்கலாம்.

பல நூல்களையும் ஒரே நேரத்திலே பக்கத்திலே வைத்துக்கொண்டு படிக்க வேண்டியதாக இருக்கலாம்; எடுத்துச்செல்லவேண்டிய நூல்கள் கனமானவையாகவும், எடுத்துச் செல்லக் கூடாதனவாகவும் இருக்கலாம்; பார்க்க வேண்டிய நூல்களின் தேவை உடனடியாக இருக்கலாம்.

குறிப்பு நூலகம் ஒவ்வொன்றும் குறைந்தது உள்ளூர்த் தொடர்பான தொகுதிகளையாவது வைத்திருக்கும். கூடியமட்டும் உள்ளூர்த் தொடர்பான முழு விவரங்களையும் அது கொண்டிருக்கும். நகரம் அல்லது மாவட்டத்தின் வரலாறு, விளைபொருள், இயற்கை வளம், மக்கள் தொகை, அவர்தம் பண்பாடு, தொழில், வாழ்க்கை முறை, பெரியோர்கள் முதலிய அத்தனையும் விளக்கவல்ல நூல், துண்டறிக்கை, வெளியீடுகள், படங்கள், கையெழுத்துப் படிகள் முதலியன அந்த நூலகத்தில் இருத்தல் இன்றியமையாதது.

உள்ளூரிலிருக்கும் தொழிலகம்பற்றிய வெளியீடுகளும், உள்ளூர்ப் பெரியோர் வரலாறு போன்ற சில தனித் தொகுதிகளும் குறிப்பு நூலகத்தில் இடம்பெறலாம். இத்தகைய தனித் தொகுதிகள், நாட்டுக்கும் உள்ளூர்க்கும் பெரிதும் பயன்தருவனவாகும். தற்கால உள்ளூர் நூல் கடன் என்றதோர் புதுமுறை வளர்ச்சியால், ஒவ்வொரு துறையிலும் இதுபோன்ற வெளியீட்டுத் தொகுதிகளைச் சில நூலகங்களிலே வைக்க வேண்டிய தேவையின் இன்றியமையாமை பெருகிவிட்டது. இதுபோன்ற தனித்துறை நூலக வளர்ச்சியால் பெரும்பயன் உண்டு. இந்த நூலகங்களைப் பிற பொது நூலகங்கள் அடிக்கடி உதவிக்காக நாடுகின்றன. அதோடு இந்தத் தனித்துறை நூலகத்

தாராது சிறந்த பயிற்சியும், நீண்ட நாள் பழக்கமும், பிற பொது நூலகங்கட்கு மிகவும் இன்றியமையாதன வாகும்.

இனி, ஏனைய இரு துறைகளைப் பார்க்கலாம். அவற்றிலே ஒன்று வெளியீட்டுத் துறையாகும். இத்துறையிலே, நாள், வார, மாத, காலாண்டு, அரையாண்டு, ஆண்டு வெளியீடுகள் சேர்க்கப்பட்டிருக்கும். புதிய வெளியீடுகளுங் காணலாம்.

பெரும்பாலான நூலகங்களிலே, காமன்வெல்த், அமெரிக்கா, இரசியா, பிரான்சு ஆகிய நாடுகளிலேயிருந்து வரும் வெளியீடுகள் பல உள. அவ்வாறு பல நாட்டு வெளியீடுகளைத் தருவித்தலின் மூலம், உலக நடப்புக்களை அன்றன்றைக்கு நூலகங்கள் மக்களுக்கு அறிவிக்கின்றன. வெளியீடுகள் அறை ஒவ்வொரு நூலகத்திலும் சிறப்பாக இருக்கும். பெரும்பாலான நூலகங்களிலே நாளிதழ் அறைகளும் இருக்கும். இந்த அறைகள் வேலை தேடு நிலையங்கள் ஏற்படும் முன்பு, வேலையில்லாதோருக்குப் பெரும்பயன் தந்துகொண்டிருந்தன. விளம்பரங்கள் மூலம். நிலையங்கள் ஏற்பட்ட பின்பு, இவை படிப்படியாகத் தம் செல்வாக்கை இழக்கத் தலைப்பட்டன.

நான்காவது பகுதி குழந்தைப் பகுதி. நூல் வழங்கும் பகுதி, படிப்பு நூல்பகுதி, குழந்தை வெளியீட்டுப் பகுதி ஆகியன இந் நான்காவது பகுதியிலே உள. இப்பகுதியே அழகாகவும், தூய்மையாகவும், கவர்ச்சியாகவும் இருக்கும் பகுதியாம். அங்கே நூல் தட்டுக்கள்மிக மிகத் தாழ்ந்து இருக்கும். அதனால் சின்னஞ் சிறு குழந்தை

கூடத் தடையின்றி வேண்டிய நூலை எளிதாக எடுக்கலாம். அப்பொழுதுதான் படிக்கத் தொடங்கியிருப்போர்க்குரிய நூல்கள் தனித் தட்டுக்களிலே அடுக்கிவைக்கப்பட்டிருக்கும்.

குழந்தை நூலகம் ஏற்படுத்துவதன் நோக்கம், குழந்தைக்கு நூலின் மேல் ஆர்வம் ஏற்படும்படி செய்தல், நூலின் மதிப்பும் பயனும் அறியச்செய்தல், படிக்கும் பழக்கத்தைக் கைக்கொள்ளுவித்தல் என்பனவாம். இங்கே இருக்கும் நூல்கள் அழகாக இல்லாவிடில், மேற்கூறிய பயன்களில் எதுவும் உண்டாகாது. அழுக்கடைந்த நூல்களைக் குழந்தை கண்ணெடுத்தும் பாராது. பார்ப்பினும் மதியாது. குழந்தை நூலகத்திலே முன்னரே தவருகப் பயன் படுத்தப்பட்ட நூல்களை வைத்தலில் ஒரு பயனும் இல்லை. பெரியோர் நூலகத்தைப் போன்றே பலதுறை நூல்களும் குழந்தைநூலகத்திலே இருக்கும். குழந்தைகளுக்குரிய பல்வேறு கதை நூல்கள் பல நூலகத்தில் உள. அஃதோடு, கவர்ச்சி மிக்கவையும், குழந்தைகளால் பெரிதும் விரும்பப்படுவனுமான நூல்களும் உண்டு. தற்பொழுது, குழந்தைகளுக்கென எழுதப்பட்ட நல்ல நூல்கள் மிகச் சிலவே என்பதில் நூலக அதிகாரிகளிடையே கருத்து வேறுபாடில்லை. இருப்பனவற்றிற் பெரும்பாலன, மிகமிகக் கீழ்த்தரமானவையாகவும், புள்ளி விவரம் செறிந்தனவாகவும் உள்ளன. குழந்தை நூல் எழுத விரும்புவார்க்கு நல்லதோர் எதிர்காலம் உண்டு. குழந்தைகளுக்கும், பழக்கமிக்க பெரிய மனிதர்களுக்கும் உள்ள வேறுபாடு, விருப்பம் பற்றியது அன்று; சொல்லாட்சியும், உள்ள வளர்ச்சியுமே ஆம். அறிவுக் களஞ்சிய

மாகப் புத்தகத்தைப் பயன்படுத்தத் தக்க குறிப்பு நூல் தொகுதி ஒன்று நூலகத்திலே உள்ளது.

குழந்தை நூலகத்திலே பெரியோருக்குரிய சில வெளியீடுகளோடு, குழந்தைக்குரிய பல வெளியீடுகள் உள்ளன. இதற்குக் காரணம், பன்னிரண்டு, பதின்மூன்று வயதான குழந்தைகள், குழந்தை நூல் கண்டு மன நிறைவு கொள்வதில்லை. குழந்தை நூலகத்திலே உள்ள தொல்லைகளிலே இது ஒரு பெருந் தொல்லையாகும். எது? குழந்தைப் பருவத்துக்கும் இளமைப் பருவத்துக்கும் இடைப்பட்டோருக்குரிய நூல்கள் எவை என்று ஆராய்ந்து நூல் தேர்ந்தெடுப்பதாகும். பதினைந்து வயது ஆன குழந்தைகளிலே பெரும்பாலான குழந்தைகள் நூலகத்திற்கு அடிக்கடி வருவதை நிறுத்தி விடுகின்றன. குழந்தைப் பருவத்துக்கும் இளமைப் பருவத்துக்கும் இடைப்பட்ட பருவத்துக் குழந்தைகளுக்குரிய நூற்பகுதி சில நூலகங்களிலே உண்டு. எனினும் அதனால் பெரும் பயன் விளைவதில்லை.

அடுத்தது நடுத்தர நகர நூலகம். இந்நூலகம் பெரியதோர் கட்டடத்திலே, குறைந்த எண்ணிக்கையுடைய நூல்கள் கொண்டு அமைக்கப்படும். இந்நூலகத்திலே, குறிப்பு நூலகப்பகுதி, வெளியீட்டுப் பகுதி முதலிய ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனி அறையோ, பிரிவோ இல்லை. ஒரு பக்கம் பொது நூல் வரிசையிருக்கும்; மற்றொருபால் குழந்தைப்பகுதி காட்சியளிக்கும்; வேறொருபால் குறிப்பு நூல்கள் தோன்றும்; அடுத்த ஒரு பால் வெளியீடுகள் காணப்படும். இத்தகைய நூலகத்

திலே, குழந்தை இலக்கியங்களை நீக்கிவிடுதல் முடியும் என்றாலும், அவற்றையும் நாம் இந்த நூலகத்திலே வைத்துக் கொள்ளலாம்.

பெரிய நகரங்களிலே கிளை நூலகங்கள் இருப்பது இன்றியமையாததாகும். தனிப்பட்ட ஆராய்ச்சியாளர்கள் பெரிய பொது நூலகங்களை நாடிச் சென்றாலும், பொதுவாக மக்கள் நூலகத்துக்காக நாள்தோறும் அரைமைலுக்கு மேலான தூரத்தை நடந்து கடக்க விருப்பங் கொள்ளார். இதற்காகவே கிளை நூலகங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. கிளை நூலகங்கள் பெரும்பாலும் வெளியே தரும் நூல்களையே அதிகமாகக் கொண்டிருக்கும். இன்றியமையாத சில குறிப்பு நூல்கள், சில வெளியீடுகள் ஆகியவையே அங்கே இருக்கும். பெரிய நகரங்களிலுள்ள கிளை நூலகங்கள் சிறிய நகர நூலகங்களைப் போல இருக்கும். சிறிய நகர நூலகத்தைவிட நகர நூலகம் வேறுபட்டது. நகரத்திலே கிளை நூலகங்கள் மிகுதி. பொது நூலகத்திலே, குறிப்பு நூலகம் அளவிலே பெரியதாகிக் கொண்டே செல்லும். இக்குறிப்பு நூலகம் இப்போது பலராலும் பயன்படுத்தப்படும் ஓர் அரிய ஆராய்ச்சிக் களமாக மாறிவிட்டது இக்குறிப்பு நூலகங்கள் நகரக்குறிப்பு நூலகமாக மட்டுமன்றி, நாட்டுப் பெரு நூலகமாகவும், பல்துறை நூலகங்களாகவும் பணியாற்ற வேண்டும். இவ்வாறு, குறிப்பு நூலகத்தின் பணி அறிவுக்களஞ்சியம் செய்யும் பணியின் அளவுக்கு விரிவடைந்திருக்கிறது. குறிப்பு நூலகத்திலே உள்ள நூல்களிலே பெரும்பாலன பொது நூலகத்தினின்றும் பிரிக்கப்பட்டனவாகும். இக்குறிப்பு நூல்களை எத்தகைய

ஆராய்ச்சி மாணவனும் வெளியே எடுத்துச்செல்லாமல், உள்ளேயே வைத்துப் படிக்கவேண்டும். தனித்துறை ஆராய்ச்சி நன்கு வளர்ந்துள்ளது. பெரிய நகரங்களிலே சிறந்ததோர் வணிகத் தொழில் நுட்ப நூலகங்கள் கட்டயம் இருத்தல் வேண்டும். இந்நூலகங்களைச் சுற்றியுள்ள பகுதிவாழ் மக்கள் செய்யும் செயல்களின் தரத்தையும், வளத்தையும் இந்நூலகங்கள் சரிப்படுத்துகின்றன.

இதுகாறும் கூறியவற்றிலிருந்து, சமுதாயம், கல்வி, வணிகம், பொருளியல் முதலிய பல துறைகளிலேயும். நூலகத்தின் செல்வாக்குப் படிந்துளது என்பதை நன்கு அறியலாம், சிறந்த நூலகங்கள் மக்களுக்கும் நூலகத்துக்கும் இடையே அரிய பிணைப்பை ஏற்படுத்த முயலுகின்றன. இதற்காகத் தனித்த விரிவுத்திட்டம் ஒன்று செயல்படுத்தப்படுகின்றது. எடுத்துக்காட்டாக ஆசிரியர்கள், குழந்தைகளுக்காக நூலகங்களைப் பார்த்தலும், அவை பணியாற்றுவதைக் கவனித்தலும், நூலகத்தைப் பயன்படுத்தலை நோக்கலும் ஆகிய வேலைத்திட்டத்தைக் கூறலாம். இதற்காக ஆசிரியர்கள் சுற்றுப் பயணம் மேற்கொள்வர். இதற்கெனத் தனி வகுப்புக்களும் சொற்பொழிவுகளும் நடக்க ஏற்பாடு செய்தல் உண்டு.

பெரியோர்களுக்காக அடிக்கடி சொற்பொழிவுகளும், பொருட்காட்சிகளும், படம், நூல், அச்சு ஆகியனபற்றி மட்டுமன்றி, படிக்கும் வழக்கத்தைப் பெருக்கத் தேவையானவை பற்றி நடத்தல் உண்டு. பல நூலகங்களிலே, வயது வந்தோர் சந்திக்க, பேச, அளவளாவ, வானொலி கேட்க, இசைத் தட்டுகளைச் சுவைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்ட தனி அறைகள் பல உள்ளன.

உள்ளூர் கழகம் கூட்டம் நடத்த, சொற்பொழிவு செய்யத் தக்க இடங்களும் நூலகங்களிலே ஏற்படுத்தப் பட்டுள்ளன. இத்தகைய ஏற்பாடுகள் நகர நூலகங் களில் மட்டுமன்றிச் சிற்றூர் நூலகங்களிலும் உள.

இதுகாறும் கூறியவை இங்கிலாந்திலுள்ள ஐந் நூற்றுக்கு மேற்பட்ட நகர நூலக அமைப்புக்களைப் பற்றியவை என்றாலும் கூட, அவையெல்லாம் தனிப் பட்டவை என்பதும், பெரிதும் ஒன்றுக்கொன்று வேறு பட்டவை என்பதும் சற்றும் மறக்கக் கூடாதனவாம். மேற்கூறிய நூலகங்களிலே ஒன்றிரண்டு நூலகங்கள் தனித்த முறையிலே விளக்கப்பட வேண்டியனவாக இருக்கலாம். அவற்றை இங்கே விரிக்கின் பெருகும். பிரிட்டன் நூலகங்கள் எவ்வாறு பணியாற்றுகின்றன என்பதைப் பார்க்க விரும்புவோர் பர்மிங்காம், பிரிச்டல், கார்டிப், எடின்பரோ, கிளாச்கோ, லீட்ச், லிவர்பூல், மாஞ்செச்டர், செப்பீல்டு ஆகிய நகரங்களிலுள்ள நூலகங்கள், போக்ச்டோன், (Folkestone) போன்டிபிரிடு (Pontyprid) சிகார்போரோ, (Scarborough) தான்டன், மதர்வெல், விசா (Wishaut) ஆகிய சிறிய நகரங்களிலுள்ள நூலகங்கள் பிர்க்கெனெட், (Birkenhead) போல்டன், அட்டர்சிபீல்டு, (Huddersfield) யார்க் ஆகிய இடங்களி லுள்ள தற்கால நூலகங்கள், பெத்னல்கிரீன், பெர்மான் டிசி, செயின்ட் மேரி, லெபோன், வெச்ட்மினிச்டர் ஆகிய இடங்களிலுள்ள நூலகங்கள், இன்னும் இவை போன்ற நகரங்களிலுள்ள நூலகங்களைப் பார்க்க வேண்டும்.

# 4. சிற்றூர் நூலகம்

நூலகம் இல்லாத இடங்களிலே நூலகம் ஏற்படுத்தும் அதிகாரம் 1919 ஆம் ஆண்டில் சிற்றூராட்சி மன்றங்கட்குச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டது. தாமாகவே தேவைப்பட்ட நூலகங்களைத் தம் செலவிலே ஏற்படுத்தற்குரிய வலிவற்ற சிறிய நகரங்கள், ஊர்கள், பட்டிகள், சிற்றூர்கள் ஆகியவற்றிலே வாழ்கின்ற மக்கள் இச்சட்டத்தின் மூலம் பின்னர் நூலகங்களை ஏற்படுத்திக் கொள்ள முடிந்தது. இங்கிலாந்திலே, சிற்றூர் நூலக இயக்கம் தனது தோற்றத்துக்கும், தொடக்ககால வளர்ச்சிக்கும், முன்னர்க் கூறிய 'கார்னீக் யுனைடட் கிங்டம் டிரச்ட்' என்ற அமைப்பின் அக்கறைக்கும், ஆர்வத்துக்கும் பெரிதும் கடமைப் பட்டுளது. மேற்குறித்த நிதியகம் தந்த பணத்தைச் சிற்றூராட்சி மன்றங்கள் நூலகத்துக்குச் செலவிடும் அதிகாரம் பெறும் முன்பு ச்டாபோர்டு சையர் என்ற இடத்திலே 1915 ல் முதன் முதலாக மாதிரிக்காக ஒரு நூலகம் தொடங்கப்பட்டது. இந்நூலகத் திட்டம் பல ஆண்டுகளாக ஆக்கம் தந்து ஊக்குவிக்கப் பட்டது. தொடக்க கால நகர நூலக வளர்ச்சியிலே நாம் கண்டது போல, சிற்றூர் நூலகங்கள் மெதுவாக வளர்கின்றன. இடத்துக்கு இடம் வளர்ச்சி வேறு

படுகின்றது. மிகச் சிறந்த நூலகத்தையுங் காணலாம்; சிறப்பில்லாத நூலகத்தையும் சிற்றூர்களிலே காணலாம்.

நகர நூலகங்கள், சில கட்டடங்கள், அதிகாரிகள், ஓரளவிற்கு அதிகமான நூல்கள் ஆகியன பெற்றுப் பணி புரிகின்றன. இவற்றுக்கு மாறாக, சிற்றூர் நூலகங்கள், பல கிளைகள் மூலம் நூல் வழங்க வேண்டியுள்ளன. அக்கிளைகள் சிற்றூர்கள் முழுதும் பரவிக் கிடக்கின்றன. ஒவ்வொரு பள்ளியாசிரியரும் ஊதியமற்ற நூலகத்தாராக இருப்பர். அவர்களுக்குச் சிற்றூர் நூலகங்கள் நூல்களை அனுப்பும், அவற்றை அவ்வாசிரியர்கள் தத்தம் பள்ளிக் குழந்தைகளுக்கும், மக்களுக்கும் வழங்குவர். பள்ளிகளைப் போன்றே, மன்றங்கள் சங்கங்கள், கழகங்கள், கோயில்கள், கடைகள், தனிப்பட்ட வீடுகள் ஆகியவற்றின் மூலம் நூல்கள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு நூல் வழங்கும் 'வழங்கு நூலகங்கள்' ஏறத்தாழ இருபதாயிரம் உள்ளன.

இம்முறையினல் ஏற்படும் பயன் அளவிற் சுருங்கியதே. சிற்றூர் நூலகங்களிலே உள்ள நூல்களின் எண்ணிக்கை, நாமாகவே நூல் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு ஏற்றதன்று; அத்துணைச் சிறியது. மேலும், ஒரு வாரத்திலே இரண்டொரு நாள் தான் நாம் நூல்கள் எடுக்க முடியும். நமக்கு ஏதேனும் ஒரு குறிப்பிட்ட நூல் வேண்டுமானல், அது பிற கிளைகளிலிருந்து அஞ்சல் மூலம் வரும் வரை காத்திருக்கவேண்டும். அது உடனே வருவதும் வராததும் சூழ்நிலையைப் பொறுத்தது.

சில சிற்றூர்களிலே நூலக வண்டிகள் நன்கு பயன் படுத்தப்படுகின்றன. பிற சிற்றூர்களிலும்கூட இவை நன்கு பயன் படுத்தப்படலாம். ஏறத்தாழ 2000 நூல்கள் கொள்ளக் கூடிய நூலக வண்டிகள், எப்பொழுதும் சுற்றிக்கொண்டே இருக்கும். அவை சுற்றுவதற்கெனக் கால அட்டவணை ஒன்று உண்டு. அதன் மூலம், இன்ன நாளில் இன்ன நேரத்தில் நூலக வண்டி இன்ன சிற்றூரில் நிற்கும் என்பதை நாம் முன்பே எளிதில் அறிந்துகொள்ளலாம். ஒரு சிற்றூரில் நூலக வண்டி வந்து நின்றால், அவ்வூர் நூலக அதிகாரி, அங்குள்ள நூல்களைச் சரிபார்த்துச் சேர்த்து அளித்துவிட்டுப் புத்தம் புதிய நூல்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வார். நூலக அதிகாரி தருவன நல்ல நிலையில் சேதமுறாமல் இருக்குமானால், நூலக வண்டியிலுள்ள புதிய நூல்களோடு சேர்க்கப்பட்டுப் பிற இடங்களுக்குக் கொண்டு செல்லப்படும். மறுபடியும் தைக்கப்பட்டுச் சீராக்கப்பட வேண்டிய சிதைந்த நூல்கள் தலைமை நூலகத்துக்குக் கொண்டு செல்லப்படும். வாய்ப்பற்ற இடங்களிலுள்ளவர்களுக்காக அவர் தம் நண்பரோ, உறவினர்களோ நூல்களை—அடுத்த முறை வரும்வரை படிக்க வேண்டிய நூல்களை வண்டியிலிருந்து எடுத்துக் கொள்ளலாம்.

நகரங்களிலும், சிற்றூர் நூலக முறையிலே பல கிளை நூலகங்கள் வாடகைக் கட்டடங்களிலும், சொந்தக் கட்டடங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்நூலகங்கள் வாரத்தில் ஓரிரு நாட்களே திறந்து வைக்கப்படும். இங்கே வேலை செய்வோர், ஒன்று தொண்டராக இருப்

பர்; அல்லது அரைநாள் வேலையாளராக இருப்பர்; அல்லது நூலகத்தாராக, நூலக அதிகாரியாக இருப்பர். இவை யெலாம் உள்நிலைமையைப் பொறுத்தவையாகும்.

சிற்றூரிலுள்ள மக்கள் கடைகளில் பலசரக்கு வாங்குவதற்கும், வேடிக்கை பார்ப்பதற்கும் நகரத்துக்குச் செல்லும்பொழுது, நகரிலுள்ள நூலகத்துக்கு ஏன் செல்லல் ஆகாது? நகர நூலகங்களில் பெரும்பாலானவை தனியுரிமை யுடையன; கிளை நூலகமல்ல; டெர்பிசையர் என்ற இடத்திலுள்ளதைப் போன்று, நூலக அதிகாரிகளிடையே ஒத்துழைப்பு இருந்தாலொழிய, சிற்றூர் மக்களால் நூலகத்தை நன்கு பயன்படுத்தல் முடியாது. வட்டார நூலகமுடைய சிற்றூர்களிலே டெர்பிசையர், இலங்காசியர் என்பனவும் அடங்கும். சிற்றூர் வட்டார நூலகமானது, அருகிலுள்ள மக்களுக்குத் தொண்டு செய்வதோடு, அருகிலுள்ள ஊர் நூலகங்களுக்கு நூல் வழங்கும் நடுநாயக நிலையமாகவும் திகழ்கிறது. இத்தகைய நூலகங்களை வட்டார நூலக ஆட்சிக்குழு மேற்பார்வையிடுகிறது.

நடுநாயக நிலையமே சிற்றூர் நூலகங்களைச் செயற்படுத்தும் திட்டத்தை ஆக்கி அளிக்கின்றது, இங்கேதான் நூல்கள் பொறுக்கல், வாங்கல், சுற்றுக்குத் தயாரித்தல், பதிதல், பிரித்து வழங்கல் எல்லாம் நடைபெறுகின்றன. பெரிய சிற்றூர்களிலே அடிக்கடி நூல் பரிமாற்றல், நடுநிலையங்களிலும், கிளைகளிலும் நூல்களைக் கூட்டல், நூல்கள் எல்லாம் சரிபார்த்தல், ஆகிய பணிகளைச் செய்தல் மிகவும் முக்கியமாகும்.

மக்களிடையே சிலர், சுழல் நூலக வண்டியிலே சேர்க்கப்படாத நூல்களை வேண்டி எழுதும் கடிதங்களுக்கு ஆராய்ந்து தலைமை நூலக அதிகாரிகள் விடை எழுகின்றனர். உள்ளூர் நூலகங்களால் தீர்க்கப்படாத சிக்கல்களும் தலைமை நூலகத்துக்கு அனுப்பப்படும். தலைமை நூலகத்திலே ஒரு பெருந்துறை இருக்கும். அதுவே கிளை நூலகங்கட்கு வேண்டிய நூல்களையும், வேண்டாத, ஆனால் சிலரே வேண்டுகின்ற நூல்களையும் பொறுக்கி எடுக்கும். எனவே நகருக்கு வருவோர் எவரும் இந்தத் துறைக்கு வரலாம். சிற்றூர் நூலகங்களும், நகர நூலகங்களும் நூலக மாவட்டத்திலே இணைப்புண்டிருக்கின்றமையால், எவரும் தாங்கள் எண்ணிய நூலை, அவர் எங்கிருப்பினும் பெறலாம்.

இதுகாறும் கூறியன சிற்றூர் நூலகங்களின் பொதுவான நடைமுறைகளாகும். இவற்றிலேயே சிறப்பாகக் குறிப்பிடத்தக்க பெருமையுடைய சிற்றூர் நூலகங்களும் உண்டு. அவை செய்துவரும் பணியும் சிறப்பானவை; குறிப்பிடத் தக்கவை. அவற்றுக்குச் சிறப்பும் மதிப்பும் அளிக்க வேண்டியது அறிஞர் கடன்; ஏன்? மக்கள் கடன். அத்தகைய நூலகங்கள் இயங்கும் இடங்கள் சில பின்வருமாறு :—

டெர்பிசையர், டிவான்சையர், கியர்போர்டு சையர், கென்ட், லங்காசையர், மிடில் செக்ச், நாட்டிங்காம் சையர். இவை இங்கிலாந்திலுள்ளன இனி வருவன ச்காட்லாந்தில் உள்ளன :— ஆயிர்சையர், ப்விசையர், லனர்க்சையர்.

# 5. லண்டன் பொருட்காட்சி சாலை நூலகம்

ஆங்கிலக் குடியரசின் நாட்டு நூலகங்களில் ஒன்றுன லண்டன் பொருட்காட்சி சாலை நூலகம்(London Museum Library) உலகில் பெரிய நூலகங்களில் ஒன்றுகக் கருதப்படுகின்றது. இந்த நூலகத்தில் உள்ள நூல்களை இதுவரையிலும் யாரும் எண்ணிக்கூற முடியாத அளவிற்குப் பெரியதொரு நூலகமாக இந்நூலகம் விளங்குகின்றது. ஏறத்தாழ ஐந்து மில்லியனுக்கு மேற்பட்ட நூல்கள் இந்நூலகத்தில் இருக்கலாம் என்று எண்ணப்படுகின்றது. திட்டவட்டமாக யாரும் ஒன்றும் கூற இயலவில்லை. இந்நூலகத்திலுள்ள நூல் தட்டுகளின் நீளம் மட்டும் அறுபது மைல்களாகும். முப்பது ஆண்டுகளுக்கு முன் நூல் பட்டியல் (Catalogue) தயாரிக்க ஏற்பாடுகள் நடைபெற்றன. இப்பணி **1931**ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றது. இருபத்துமூன்று ஆண்டுகள் உருண்டோடின. இப்பணி முடிவுற்றதா? இல்லை. வல்லுநர்கள் இதுபற்றிச், சிந்தித்து "நூல் பட்டியல் முழுமை பெற வேண்டுமாஞல் இன்னும் 82 ஆண்டுகள் ஆகும்; அவ்வாருயின் எங்களில் எவரும் அதனைப் பார்க்கும் வரையிலும் உயிரோடு இருக்க மாட்டோம்" என்ற முடிவிற்கு வந்தனர். எனினும், அப்பணி இன்றும் தொடர்ந்து நடந்து கொண்டுதானிருக்கின்றது. போர்க் காலங்களில் அவ்வேலை சிறிது தடைப்பட்டது. இப்பொழுது உள்ள வேகத்தில் நூல் பட்டியல் தயாரிப்பு வேலை நடைபெறுமாஞல், இறுதியான அல்லது

முழுமையான நூல் பட்டியல் 2036ஆம் ஆண்டில்தான் முடியும். அப்பொழுது நூல் தட்டுகளின் நீளம் எண்பது மைலாகிவிடும்.

இத்தகைய மிகப் பெரிய நூலகத்தை நிறுவிய பெருமை சர். அந்தோணி பானிசி என்பவரைச் சேரும். பிரிட்டன் பொருட்காட்சி சாலை கி. பி. 1753-ல் தொடங்கிய பொழுது, தாவர விஞ்ஞானியும், மருத்துவரும் ஆகிய சர் ஆன்சுலோன் (Sir Hanslone) என்னும் பெருமகனுர் தாம் சேர்த்து வைத்திருந்த நூல்கள், கையெழுத்தேடுகள், நாணயங்கள், ஓவியங்கள், பதக்கங்கள் ஆகியவற்றை நாட்டு மக்களுக்குப் பயன்படுமாறு குறைந்த விலைக்கு அரசினர்க்கு அளித்து அழியாப் புகழ்பெற்றுர். இவர் அவ்வாறு உதவ நினைத்தபொழுது, பாராளுமன்றம் அவற்றை வாங்குதற்கு முடிவு செய்தது. அவற்றோடு கார்லியன் கையெழுத்தேடுகளும் (Harleian MSS) சேர்க்கப்பட்டன. இதன் பொருட்டும், நூலகம், பொருட்காட்சி ஆகியவற்றின் செலவிற்காகவும் ஓர் இலட்சம் பவுன்கள் ஒதுக்குவதென்று பாராளுமன்றம் முடிவு செய்தது.

மாண்டேகு இல்லத்திலே நூலகமானது கி. பி. 1759ஆம் ஆண்டு, சனவரி மாதம், பதினைந்தாம் தேதியில் ஏற்படுத்தப்பட்டுப் பொதுமக்களுக்காக அன்றே திறக்கப்பட்டது. 1763ஆம் ஆண்டில் மூன்ரும் சார்ச் மன்னர் அரச நூலகத்தை அளிக்கவே, இடம் போதாத காரணத்தினல், இன்று கவினுடன் விளங்கும் நூலகக் கட்டடத்தின் முதற்பகுதி கி. பி. 1828-ல் கட்டி முடிக்கப்பட்டது. இந்நூலகத்தின் உலகப் புகழ்வாய்ந்த படிப்பகம் (Reading

Room) கி. பி. 1857–ல் திறக்கப்பட்டது. இப் படிப்பகத்தைச் சுற்றிலும் நூலறைகள் உள. நூலறைகளில் எஃகுத் தட்டுக்கள் உள. அத்தட்டுக்களே தற்கால இரும்பு நூல் தட்டுக்களுக்கு அடிப்படையாகும். இவற்றிலே சுழல் தட்டுக்களும் தொங்கு தட்டுக்களும் பொருத்தப்பட்டுள்ளன. இப் படிப்பகக் கட்டடத்திலுள்ள தூபியானது உலகத்திலேயே இரண்டாவது பெரிய தூபியாகக் கருதப்படுகிறது. ரோம் நாட்டைச் சேர்ந்த பாந்தியன் (Pantheon) தூபியைக் காட்டிலும் இரண்டடி தான் குறைவாக உள்ளது. இப் படிப்பறையில் 450 மக்கள் அமர்ந்து படிப்பதற்கேற்ற இருக்கை வசதிகள் உள்ளன. ஏறத்தாழ 65,000 நூல்கள், இப் படிப்பகச் சுவர்களைச் சுற்றிலுமுள்ள நூலறைகளில் உள்ளன. அவற்றில் 25,000 நூல்கள் பொது நூல்களும் குறிப்பு நூல்களுமாம். இப் படிப்பகம் தவிர, கிடைத்தற்கரிய நூல்களைக் கொண்டிலங்கும் வடக்கு நூலகமும் (North Library), நாட்டுப் படங்கள், கையெழுத்துச் சுவடிகள், கீழைநாட்டு நூல்கள், அரசாங்க ஆணைகள், பத்திரங்கள் ஆகியவற்றிற்காகத் தனித்தனியாக விளங்கும் படிப்பறைகளும் இந் நூலகக் கட்டடத்தில் உள்ளன. பல இலட்சக்கணக்கான பருவ, நாள் வெளியீடுகள் லண்டன் மாநகருக்கு சில மைல்கள் தள்ளி அமைந்துள்ள கட்டடங்களில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. லண்டன் பொருட்காட்சிசாலை நூலகத்திற்கு நாள்தோறும் ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் வந்து செல்லுகின்றனர். ஓர் ஆண்டில் ஏறத்தாழ 2,000,000 நூல்கள் வாசிக்கப்படுகின்றன. இந் நூலகத்தில் ஏறத்தாழ ஒன்றேகால் இலட்சத்திற்கு மேற்பட்ட கீழை

[illegible]டு நூல்களும், பதினாயிரத்திற்கு மேற்பட்ட கீழை மொழிக் கையெழுத்துச் சுவடிகளும், உள்ளன. ராசர் [illegible] பாதிரியார் கி. பி. 1799 ஆம் ஆண்டில் அளித்த [illegible] தொகுதிகளும், சர். சோசப்பாங்கு என்பவர் கி. பி. 1820–ல் அளித்த அறிவியல் நூல்களும் இந் நூலக வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின.

1842-ல் பாராளுமன்றம் ஒரு சட்டம் செய்தது. எவரேனும் நூல் வெளியிட்டால் அந் நூல் வெளியான ஒரு மாதத்திற்குள் அந் நூலின் படியொன்று, லண்டன் பொருட்காட்சிசாலை நூலகத்திற்கு இலவசமாக அனுப்ப வேண்டும் என்று அச் சட்டம் கூறுகின்றது. இதன் காரணமாக ஆயிரக்கணக்கான நூல்களும், பருவ வெளியீடுகளும் நூலகத்தில் வந்து குவிந்த வண்ணமாக இருக்கின்றன. இதுவரையில் வந்து சேர்ந்த நூல்கள், செய்தி இதழ்கள், ஆகியவற்றின் நிறை 2,000 டன் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந் நூலகத்தை வேறோர் இடத்திற்கு மாற்றவேண்டுமானால் இரு நூறு லாரிகள் ஆறு வாரங்கள் ஓட வேண்டும். இருபதாண்டுகட்கு முன்னர் இந் நூலகத்தின் செய்தி இதழ்ப் பகுதி லண்டனிலேயே உள்ள கோலிண்டேல் (Colindale) என்ற ஓர் இடத்திற்கு மாற்றப்பட்டது. அவ்வாறு மாற்றுவதற்காக 15 லாரிகள் ஆறு வாரங்கள் ஓடின. அப்பொழுதிருந்த தொகுதிகளின் எண்ணிக்கை 3,50,000 ஆகும். இன்று 1,00,000க்கு மேற்பட்ட தொகுதிகள் உள்ளன.

காந்தி அடிகள், லெனின், சர் ச்டாப்போர்டுகிரிப்ச், சர்ச்சில், காரல்மார்க்ச் முதலிய அறிஞர்கள் இந் நூலகத்தைப் பெரிதும் பயன்படுத்தினர்.

இந் நூலகத்தைச் சேர்ந்த கையெழுத்தேட்டகத்தில், ஐரோப்பாவினைச் சேர்ந்த 54,000 கையெழுத்துச் சுவடிகளும், பிற நாட்டுச் சுவடிகளும் உள்ளன. இவற்றின் காலம் கி.மு. 300 முதல் தற்காலம் வரை ஆகும். இங்கிலாந்து பற்றிய பழமையான வரலாற்றுச் சுவடிகள், ஆங்கில சாக்சன் அரசர்களின் எழுத்துக்கள், ஆர்த்ரேனியன் கதைகள், வெளிவராத ஆங்கிலேய எழுத்தாளரின் நூல்கள், பொன்னெழுத்தேடுகள், மிகப் பழமையான பைபிள், இலியத், ஒடிசி ஆகியவற்றின் மிகப் பழமையான ஏடுகள் முதலியன உள்ளன. அவை உண்மையிலேயே இந் நாட்டின் சிறந்த செல்வங்களாகும்.

எடின்பர்க்கில் உள்ள ச்காட்லாந்தின் நாட்டு நூலகமும் (National Library), வேல்சின் நாட்டு நூலகமும் குறிப்பிடத்தகுந்த நூலகங்களாகும். லண்டன் பொருட்காட்சிசாலை நூலகத்தைப்போன்று பெரிய நூலகங்களாக இல்லாவிடினும், அதற்கடுத்த நிலையில் அவை சிறந்து விளங்குகின்றன. அவை செய்யும் தொண்டு அளவிடற்கரியதாகும்.

மங்கை வெளியீடு